பாலவித்யா

தொகுதி I மலர் 12

டிசம்பர் 1930

JL

'ஜ72 11, N30BV
N130·1·12
188777

223
Regd. No. M. 2573.



# பாலவித்யா.

## சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு.

பாலவித்யா ஜர்னலின் 1வது ஆண்டு இந்த டிஸம்பர் மாதத்தோடு முடிவடைகிறது.

௸ வருஷத்தில் சபேசன் என்ற ஒரு பெரிய நாவலும், 2 சிறிய நாடகரூபமான நாவல்களும், மற்றும் சில சிறு கதைகளும், வியாஸங்களும் வெளிவரலாயிற்று.

நாளது டிஸம்பர் மாதத்திலேயே ஓர் பெரிய அற்புதமான நாவல் துவக்கம் செய்து 1931 வருஷத்தில் இரண்டு பெரிய நாவல்களும், இதர சிறு கதைகள், வியாஸங்களும் வெளியாகும்படி ஏற்பாடுசெய்திருக்கிறது.

பாலவித்யா பரந்த பல நன்னோக்கங்களைக் கொண்டு ஆரம்பிக்கப் பெற்றிருக்கிறதென்பதை வேண்டுகோள் என்னும் தலைப்புப் பாடலாலே நாடறியச் சொல்லியுள்ளோம். எந்த நோக்கமும் மக்கள் பலருடைய ஆதரவைப் பெற்றாலன்றி நாட்டிற்பரவி நன்மை பயக்கும் நிலையை அடைய முடியாது. இதனை நீவிரும் உணர்ந்தே இருப்பீர்.

ஆகவே சந்தாதாரர்கள் இந்த ஸஞ்சிகையில் சேர்க்கப்பட்டிருக்கும் ஆர்டர் பாரத்தில் கையெழுத்து செய்து அனுப்பி (V. P.ல் அனுப்பினால் 4 அணா அதிகம் சிலவாகிறபடியால்) சந்தா தொகையையும் மணியார்டர் செய்து 2வது ஆண்டுக்கு சந்தாதாரராகச் சேர்ந்துகொள்வதுடன் தங்கள் சிநேகிதர்களையும் சந்தாதாரர்களாக சேரும்படி செய்வீராயின் நம் நாட்டுக்கு எங்களை நல்ல தொண்டராக்குதலாகிய நற் காரியத்தைச் செய்தவர்கள் ஆவீர். எங்கள் தொண்டும் பல் நல்வழிகளிலே பரந்து பயன் தருவ[illegible]

“ஒன்றே செய்யவும் வேண்டும்; ஒன்றும்
நன்றே செய்யவும் வேண்டும்; நன்றும்
இன்றே செய்யவும் வேண்டும்; இன்றும்
இன்னே செய்யவும் வேண்டும்.” (கபிலர்)

பதிப்பாளர்கள்.

# பால வித்யா

(மாதப் பத்திரிகை)


188777 1931 600 008

" உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்"
" எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"


| தொகுதி I | 1930 ஆம் டிஸம்பர் மீ<br>பிரமோதூத ஆம் மார்கழி மீ | பகுதி XII |
|---|---|---|


## ஆதி ஔஷதாலயம் இந்தியாவேயாகும்.

பிறப்பிற்குரிய நோய்களைத் தீர்க்கும் ஔஷதிகள் ஜீவஜெந்துக்களிடமிருந்து கண்டுவெளியிடப்பட்டனவென்பது நமது இந்து வைத்திய சாஸ்திரிகளின் கொள்கை. ஔஷதிகள் நான்கு வகைப்படும். அவை மரம், செடி, கொடி, புல். பிராணிகள் அவைகளுக்குக் காணும் ஜாட்டியங்களை ஸ்வதாவாக சில பூண்டுகளைத் தின்றோ அல்லது ஸ்பரிசித்தோ அல்லது முகர்ந்தோ சௌக்யத்தையடையும் இயற்கையைக் கண்டு பரிசீலனஞ்செய்து அவ்வௌஷதிகளை நமது முதியோர் நமக்கு தெரிவித்திருக்கின்றனர். நாமும் அக்கொள்கை வாஸ்தவமென்று அங்கீகரிக்க ஒரு சிறு இயற்கையைக் காணலாம். கீரிக்கும் பாம்புக்கும் வைரமென்பது யாவருக்கும் தெரிந்ததே. கீரியானது பாம்பைக் கடித்ததும் அவ்விஷம் யாதொரு கெடுதியை செய்யவொட்டாமல் ஓர் பூண்டை அது தின்பதாக அறிந்திருக்கிறோம் ஆகையால் மேற்கூறிய நமது வைத்திய சாஸ்திரிகளின் கொள்கை சரியென்பதற்கு ஐயமே இல்லை. மேலும் இச்சமாதானமே ஆதிகொண்டதென்று பலர் ஆமோதித்துமுளர்.

2. புண்ணிய பூமியாகிய இந்தியாதான் ஔஷதிகளை முதன்முதலாகக் கண்டறிந்ததென்று கூறவேண்டும். கிரேக்கநாடு தன்வந்திரியாகிய **இப்பாகிரீடிஸ்** என்பவரும் இந்திய முறைகளை கற்றனரென்றும் அதற்காகவே அவர் இந்தியாவிற்கு வந்தனரென்றும் கூறப்பட்டுள்ளது. இவ்வாறிருக்க சிலர் வைத்திய சாஸ்திர நிபுணத்வத்தை எகிப்து நாட்டோர்களுக்கும், கிரேக்கர்களுக்கும் ஈய்ந்திருப்பது வியக்

கத்தக்கதே. காலஞ்செல்லவே, ரே. காப்டன் ஜாக்சன் முதலிய [illegible]யின்பேரில் வைத்திய சாஸ்திரத்திற்கு பாதநாடே [illegible] பல காரணங்களைக் கொண்டு தீர்மானித்துளர்.

3. ஆதிகால[illegible] ஐரோப்பாவானது சண்டை சச்சரவுகளால் குழப்பத்தைக்கொண்டு அமைதியற்றிருந்த காலம் முதல் இந்தியாவில் பல மூலிகைகள் உபயோகிக்கப்பட்டு ஜனங்கள் தேக சௌக்யத்தையும் ஆரோக்கியத்தையும் பெற்றுவந்தனர். மேலும் தற்காலத்தில் பல தேசத்தோர்களால் உபயோகிக்கப்பெற்றுவரும் வைத்திய முறைகள் ஏற்கனவே இந்தியாவில் கையாடப்பட்டுவந்தன உதாரணமாக (1) ஸ்ட்ரிக்னின் என்னும் மருந்தானது எட்டிக்கொட்டையிலிருந்து தயாரிக்கப்படுகிறது. நமது தன்வந்திரிகள் எட்டிக்கொட்டையால் கருமேகம், விஷகடி, குஷ்டம், வாத வலி, வீரிய நஷ்டம், மூர்ச்சை, பைத்தியம் முதலியவை நீங்குமென்று நமக்கு போதித்துளர். (2) சூரத்து நிலஆவாரையினால் பற்பல மூலவாயு, ஜுரம், வயிற்றுவலி, மலக்கட்டு இத்யாதிகள் குணப்படுமென்று கற்பித்துளர். 3) இன்னும் பாஷாணங்களை உபயோகிக்கும் விதமும் அவைகளாலடையக்கூடிய குணங்களையுங் கண்டு செப்பியுமுளர்.

4. இந்திய அரிய முறைகளும் நூல்களும் ஒரு காலத்தில் மனிதர்களின் துர்செயல்களாலும் அஜாக்கிரதையினாலும் கைசோரவிடப்பட்டு சமுத்திரத்தி லெறியப்பட்டனவென்றும், பிறகு தேவர்கள் அனுதாபங்கொண்டு, மந்திரகிரியை ஓர் மத்தாக்கி, ஆதிசேஷனை அதற்கு கயிறாக்கி, சமுத்திரத்தைக் கடைய, அதிலிருந்து கவுஸ்துபமணியுடன் லெக்ஷ்மியும், அமுதத்துடன் தன்வந்திரியும் வெளிக்கிளம்பியதாக புராணத்தில் வரையப்பட்டுளது இத் தன்வந்திரியே இந்தியாவிற்கு வைத்திய சாஸ்திரியும் குருவுமானார். இவரின் பிரதம சிஷ்யர் சாரகர். இவர் அனேக வைத்திய கிரந்தங்களுக்கு வியாக்யானஞ் செய்துளர். இவர் மிகவும் பூர்வீகரானதால் நாகரீக உலகத்தோரால் அறியக்கூடவில்லை. அவர் உயிர்ப்பித்திருந்தது 2000 பி. வி. என்று பலர் கணக்கிட்டிருக்கின்றனர்.

5. பிணியாளிகளின் நோய்களை பரீக்ஷிக்கவேண்டில் அஷ்டலக்ஷணங்களைக்கொண்டுதான் நிர்ணயிக்கவேண்டுமென்று நமது நூல்கள் முறையிடுகின்றன. மதாசாரக்கொள்கைகள் நமது சாஸ்திரத்தை விருத்திகொண்டு பிராதானியமடையவொட்டாமல் தடுத்தன. பௌத்தமதம் தலையோங்கியிருந்தகாலத்தில் .நோய்களைத் தீர்க்க மணிமந்திரமென்பதை உபயோகிக்கலானார். ஔஷதிகள் யாவையும் மறந்தனர். இவ்வாறிருக்க, மேல் நாட்டோர் எகிப்து, கிரேக்கர், அரபிதேசத்தாரின் சிகித்ஸாமார்க்கங்களை கற்றுணர, அன்னாட்டோர்களின் முறைகள் முன்னேற்றங்கொண்டு நமது ஆதி நூல்கள் இருப்பிடமே தெரியாமல் மறைந்தன.

S V. RAM, F.M.C. (Lon.)

8-JAN 1931

# கஜபதிசிங்

அல்லது

# மேனாட்டு துப்பறிபவன்.

ஆசிரியர் :—கரிசூழ்ந்தமங்கலம், K. சங்கரநாராயணன்

(பதிப்புரிமை ஆசிரியனுக்கு).

—o—

## லலிதா பாங்கு.

## Lalitha Bank.

லலிதா பாங்கைப்பற்றி அறியாதவர்கள் கல்கத்தாவில் மிகச் சிலரேயாவர். பாங்கின் பொக்கிஷ அறையைப் பெரிதாக்கவும், ரசாயன முறைப்படி நிர்மாணஞ் செய்யவும், அதன் நிர்வாக உத்தியோகஸ்தர்கள் (The Directors of Lalitha Bank) நினைத்து வேலை துவக்கினர். ஆனால் ஐரோப்பிய யுத்தத்தின் பயனாக வேலை மெதுவாகவே நடந்துவரலாயிற்று. வேலைசெய்ய குத்தகை யெடுத்தவர்களுக்கு (Contractors) மனச்சோர்வுண்டாயது. ரசாயன முறைப்படி வேலைசெய்யும் மனிதர்கள் காணபதரிதாயிற்று.

சுந்தரலால் என்பவன் ரங்கூனைச் சேர்ந்தவன். நல்ல வேலைக்காரன். உயரமாயும், கட்டுவிடாத தேகத்துடனும், நீண்ட மீசையுடனும், அவன் சுமார் 35 வயதுடையவனாகக் காணப்பட்டான்.

ராம்சிங் என்பவன் பஞ்சாபைச் (Punjab) சார்ந்தவன். அமெரிக்காவில் 15 வருட காலமிருந்து ஏராளமான பொருளுடன் இந்தியாவிற்கு வந்தவன். இவனுக்கு வயது 50க்கு மேலிராது.

இருவரும் லலிதா பாங்கின் பொக்கிஷ அறை சம்மந்தமான வேலையில் அமர்த்தப்பட்டனர். இருவரும் சின்

னாட்களில் உயிர்த்தோழர்கள் போன்று காணப்பட்டனர். இருவரும் ஒரே ஜாகையி லிருந்துவந்தனர். இருவரும் ஒரே விடுதியில் (Hotel) போஜன மருந்திவந்தனர்.

பொக்கிஷ அறையின் வேலையும் நாளடைவில் முடியலாயிற்று. சுவர்கள் சிமெண்டினாலும்(cement), வலுவான கற்களினாலும் (granite) கட்டி முடிக்கப்பட்டன. மின்சாரக் கம்பிகள் இரண்டங்குலம் கற்களுக்குக் கீழ் புதைக்கப்பட்டிருந்தன. இக்கம்பியின் உதவியால் களவை முற்றிலும் நிறுத்திவிடலாமென்று நிர்வாக உத்தியோகஸ்தர்கள் நினைத்தனர். லலிதா பாங்கின் கிளைகள் இந்தியாவின் பல பாகங்களிலு மிருக்கின்றன. கிளை ஸ்தாபனங்களின் பணமும் தலைமை ஆபீசுக்குத்தான் அனுப்பப்படவேண்டும். ஆகவே லலிதா பாங்கின் தலைமை ஸ்தாபனத்தில் ஏராளமான பணங் காணப்படும். இவ்வித ஜாக்கிரதையுடன் இரும்புக் கவசங்களினால் உள்ளே மூடப்பட்ட அறையின் மத்தியில் ஓர் பெரிய பணப்பெட்டி வைக்கப்பட்டது. அப்பெட்டியைத் திறப்பதற்கு எப்பொழுதும் இரண்டு மனிதர்கள் தேவையாயிருக்கும்.

பாங்கின் பொக்கிஷ அறை வேலை நடந்துகொண்டிருக்கும்பொழுதெல்லாம், நமது நண்பர்கள், சுந்தரலாலும் ராம்சிங்கும், பாங்கின் அடுத்த கட்டிடத்திற்கு அடிக்கடி போய்க்கொண்டிருந்தனர். அக்கட்டிடம் ஓர் நாவிதன் கடை (Barber's Saloon). வாரத்தில் மும்முறை அவர்கள் க்ஷவரஞ் செய்துகொள்வது வழக்கமாயினும் நாள்தோறும் அக்கடைக்குப் போய்வந்துகொண்டிருந்தனர்.

நாவிதன் பெயர் முருகன். திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்தவன். பொருளீட்டும்பொருட்டு இலங்கை, கோலாலம்பூர் முதலிய இடங்களுக்குச் சென்றிருந்தவன். நமது கதை நிகழுங்கால் கல்கத்தாவில் கடைவைத்து நடத்திவந்தான். தனக்குப் போதிய வருமானங் கிடைப்பதில்லையென்றும், சுக க்ஷவரக்கத்தியின் (Self-shaving razor) பயனால் அநேக ஜனங்கள் கடைக்கு வருவதை நிறுத்திவிட்-



டார்களென்றும், சுந்தாலால், ராம்சிங் முதலியவர்களிடம் வருத்தப்பட்டுக் கூறுவதுமுண்டு. நாளடைவில் இம்மூவரும் நட்பினர்களானார்கள்.

லலிதா பாங்கின் பொக்கிஷ அறை வேலை முடிந்ததும் சுந்தரலாலும் ராம்சிங்கும் ஒன்றுசேர்ந்து, அவர்களுக்குக் கிட்டிய பணத்திற் கொஞ்சம் முருகனுக்குக் கொடுத்து அக்கடையை (Saloon) விலைக்கு வாங்கினார்கள். "நாவிதன் கடை" என்ற பலகையைக் களைந்துவிட்டு சுந்தரலாலும் ராம்சிங்கும் சாதாரண மனிதர்கள்போன்று காலங் கழித்துவந்தனர்.

ஒரு நாள் இரவு, சுமார் 12 மணி சமயத்தில், சுந்தரலாலும் ராம்சிங்கும் அவர்களுடைய ஜாகையின் வடக்கு மூலையிலுள்ள குழி அறையில் (Underground room) பேசிக்கொண்டிருந்தனர்.

சுந்தரலால் :— நம்முடைய மாறு பெயர்களை இந்நகர் போலீசார் அறிந்திருக்கமுடியாது. இன்று புதன் கிழமை. எவ்வாறாயினும் சனிக்கிழமை காலை சிங்கப்பூருக்குப் பிரயாணப்படவேண்டியதுதான்.

ராம்சிங் :— அப்படித்தான். ஆனால் நம்முடைய வேலை யொன்றும் முற்றுப்பெறவில்லையே.

சுந்தரலால் :— பாங்கின் பொக்கிஷ அறைக்குள் செல்வதற்குப் பாதை தோண்டியாய்விட்டது. இன்னும் 2 அடிக் கற்களைத் தோண்டிவிட்டால் அறைக்குட் சென்றுவிடலாம். இரும்புப்பாளங்களைப் பிளப்பதற்குத்தான் நல்ல ஆயுதங்களை நாளைக்கு விலைக்கு வாங்கிவரவேண்டும்.

ராம்சிங் :— அபாயத்தை அறிவிக்கக்கூடிய மின்சாரக் கம்பிகளை (alarm electric wires) மாத்திரம் ஜாக்கிரதையுடன் அறுக்கவேண்டும். இல்லாவிட்டால் நமது முயற்சிகள் யாவும் வீணாய்விடும். அஜாக்கிரதையாய் வேலைசெய்தால் அக்கம்பிகள் கணகணவென்று மணியோசை செய்துவிடும்.

**சுந்தரலால் :—** நீ கூறுவது உண்மைதான்.

**ராம்சிங் :—** என்ன யோகம் நமக்கு! இன்னும் இரண்டு நாளில் கோடீசுவரப் பிரபுக்களாகப் போகின்றோம். சிங்கப்பூருக்குச் சென்றபிறகு அழகுவாய்ந்த அணங்கை மணந்துகொண்டு இன்பமனுபவிக்கப் போகும் நம்முடைய யோகமே யோகம்! ஆனால் போலீசார் கையில் அகப்பட்டுவிட்டால்—

**சுந்தரலால் :—** 15 வருடம் தீபாந்தர சிட்சை கிடைக்கும். அவ்வளவுதானே ?

**ராம்சிங் :—** இன்று புதன்கிழமை. வியாழக்கிழமை இரவு காரியத்தை முடித்துக்கொண்டு, வெள்ளிக்கிழமை இங்கிருந்துவிட்டு, சனிக்கிழமை காலையில் கப்பல் ஏற வேண்டியதுதான். நம்முடைய சாமர்த்தியங்களைக் கண்டுபிடித்துக்கொண்டு போலீசார் வருவதாயிருந்தாலும் சனிக்கிழமை காலைக்குள் வரமுடியாது.

**சுந்தரலால் :—** நாம் இந்நாட்டைவிட்டே சென்றுவிட்டோமென்றுதான் போலீசார் நினைத்திருக்கின்றனர். அதுவும் நல்லதுதான். டில்லியில் இந்துஸ்தான் பாங்கில் நடந்த கொள்ளையைப் பற்றி போலீசார் மறந்துவிட்டனர்.

இவ்வாறு நண்பர்கள் பேசினர். வியாழக்கிழமை இரவு இருவரும் மிகுந்த ஜாக்கிரதையுடன் வேலைசெய்யத் தொடங்கினர். மணி 1 இருக்கும். மழையும் பெய்துகொண்டிருந்தது. ராம்சிங் முதலில் சென்றான். இடத்தைக் குறிப்புப் பார்த்துவிட்டு வந்தான். பிறகு சுந்தரலால் சென்று, இரண்டடி கற்களையும் சிமண்டையும் கோடாலியின் (Pick-axe) உதவியால் குடைந்து தள்ளினான். என்ன ஆச்சரியம்! லலிதா பாங்கின் பொக்கிஷ அறைக்குள் இருவரும் ஒருவித சிரமமன்னியிற் சென்றனர். "எதுவந்தாலும் பாதகமில்லை. சுந்தரலால்! ஆயுதங்களை என்னிடமளிப்பாய். இரும்புக்கதவு உயரத் தூக்கப்படவேண்டும். மின்சாரக்கம்பிகள் அறுக்கப்படவேண்டும். ரப்பர்



கையணியை என்னிடங் கொடுப்பாய். மின்சாரக்கம்பியை அறுத்ததும் பாங்கு வெளிச்சம் நின்றுவிடுமாகையால் தீப்பெட்டியையுந் தயாராக வைத்திரு. எனது படிப்பு (Something of Electrical Engineering) இப்பொழுதுதான் உபயோகப்படுகின்றது." என்று ராம்சிங் கூறிக்கொண்டே வேலையில் கண்ணுங் கருத்துமாயிருந்தான். பணப்பெட்டி (Iron Safe) இடங்கொடுத்தது. தீயின் (Electric Blow-pipe) மூலமாய் பணப்பெட்டியின் முன்பாகம் இளகிற்று.

சுந்தரலால் (ஆச்சரியத்துடன்) "அப்பா! எவ்வளவு நோட்டுக்கள்!" என்றான்.

ராம்சிங் "காலத்தை வீண்போக்காதே. பைகளைக் கொடுப்பாய். ஆயிரக்கணக்காய் பண நோட்டுக்களையும், சாவரன்களையும், நகைகளையும் மூட்டை கட்டு. ஒரு நிமிடத்தில் ஆபத்து —" என்று ஆத்திரத்துடன் கூறினான்.

பெரிய மூட்டைகளுடன் அவ்விருவரும் லலிதா பாங்கினின்றும் கள்ள அறை வழியாய் வெளிவந்து, தங்களுடைய அறையை அடைந்தனர். "இப்பொழுதே சென்று ஒரு மோட்டாரை வாடகைக் கமர்த்திவா. இவ்விடத்திலிருந்து நான் குறிப்பட்ட இடத்திற்குப் போய் விடுவோம். அங்கிருந்து சனிக்கிழமை காலை 5 மணிக்குத் துறைமுகம் செல்வதற்குச் சுலபமாக இருக்கும்." என்று ராம்சிங் கூறினான்.

வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு பொக்கிஷதார் வந்தார். வழக்கப்படி பொக்கிஷ அறைக்குச் சென்றார். கல்பிரதிமைபோன்று உடனே நின்றுவிட்டார். அவருக்குப் பின்வந்த மானேஜரும் பொக்கிஷ அறையை அடைந்ததும் உயிரற்ற பிணம்போலானார்.

10 நிமிடங்கள் கழியுமுன், பொக்கிஷதார் போலீஸ் ஸ்டேஷனை நோக்கி மோட்டார் பைசிக்கிளில் வெறிபிடித்தவர்போல் ஓடத்தலைப்பட்டார். மானேஜரும் நிர்வாக உத்தியோகஸ்தர்களிடம் டெலிபோன்வழியாய் தான் கண்ட காக்ஷியைக் கூறினார்.

சிறிது நேரத்தில் இன்ஸ்பெக்டர் ஜாக்சனும் பிரதம நிர்வாக உத்தியோகஸ்தர் சாட்டர்ஜீயும் ஓடிவந்தனர். பாங்கில் நடந்திருக்கும் கொள்ளையைப் பார்த்தும், கள்ளவழி செய்திருப்பதை நோக்கியும், சாட்டர்ஜீ திகிலடைந்துவிட்டார். பாவம்!

சுந்தரலால் ராம்சிங் என்றவர்களைக் கட்டிடவேலையில் அமர்த்தினதையும், வேலை முடிந்தபிறகு அவ்விருவரும் அண்டையிலிருந்த நாவிதன் கடையை விலைக்கு வாங்கியதையும், கொள்ளை நடந்த இரவு சுந்தரலால் அவ் வீதியிலுள்ள மோட்டார்க் கடையினின்றும் வாடகை மோட்டாரொன்றை ஓட்டிச் சென்றதையும் இன்ஸ்பெக்டர் ஜாக்சன் சீக்கிரங் குறித்துக்கொண்டார். திருடர்களிருவரையும் நான்கு மணி நேரத்திற்குள் பிடித்துக் கொடுப்பதாக இன்ஸ்பெக்டர் உறுதிமொழி கூறினார். சாட்டர்ஜீ மிகுந்த அனுபவம் வாய்ந்தவர். எக்காரியத்தையும் அவசரப்படாமல் செவ்வனே யோஜித்துச் செய்துமுடிப்பவர். "இன்ஸ்பெக்டரவர்களே! இக் களவின் இரகசியத்தைக் கண்டுபிடிக்க மூளையின் பிரயாசைவேண்டும். நீங்கள் இலாகாப்படி வேலை செய்யுங்கள். இக் களவைக் கண்டுபிடிப்பதற்கு சிறந்த துப்பறிபவர் வேண்டும். சமீபத்தில் இங்கிலாந்தினின்றும் திரும்பிய சென்னை துப்பர் சிங்கம் ஸ்ரீமான் கஜபதிசிங் என்னுடைய சிறந்த நண்பர். அவரும் அவருடைய சீடன் வேணுவும் சுகமாய் இரண்டுமாதகாலத்தைத் தள்ளவேண்டுமென்று இப்பொழுது நமது நகருக்கு வந்திருக்கின்றனர். அவர் சீமையில் நவீனமுறை துப்பறியுந் தொழிலைக் கற்றுவந்திருக்கின்றார். அவருக்கு நான் செய்திசொல்லி அனுப்புகின்றேன்." என்று சாட்டர்ஜீ கூறினதும் ஜாக்சனுடைய வதனம் வெளுத்துவிட்டது.

"இதைக் கண்டுபிடிப்பதற்கு என்னைவிடப் பெரியவன் ஒருவன் இருக்கின்றானா? உங்கள் நண்பர்கள் வருமுன் சுந்தரலாலையும் ராம்சிங்கையும் இங்கு கொண்டுவந்து சேர்க்கின்றேன். என்னுடைய ஆட்கள் அப்பொழுதே மோட்டாரைப் பின்பற்றிச் சென்றனராம். பவானிப்பூர் பெரிய



ஹோட்டல்வரை மோட்டார் சென்றிருக்கின்றதாம். ஹோட்டல்வாயிலில் சிறிதுநேரம் நின்றிருக்கின்றதாம். அதற்கப்புறம் மோட்டாரின் பாதை அடையாளந் தெரியவில்லையாம்." என்று இன்ஸ்பெக்டர் ஜாக்சன் கூறி, விடைபெற்றுச் சென்றுவிட்டார்.

அன்றுமாலைவரை இன்ஸ்பெக்டர் ஜாக்சன் பகீரதப் பிரயத்தனஞ் செய்தும் ஒன்றும் பயன்படவில்லை. நவீன ரசாயனக் கள்வர்களைப் பிடிக்க இவ் வாங்கிலேய சிரோன்மணியால் முடியவில்லை. சுமார் 5 மணி சமயத்தில் களைப்படைந்த முகத்துடன், இன்ஸ்பெக்டர் ஜாக்சன் கஜபதிசிங் ஜாகையை அடைந்தார். கஜபதிசிங்கும் வேணுவும் அப்பொழுது சீட்டு விளையாடிக்கொண்டிருந்தனர். இன்ஸ்பெக்டரைப் பார்த்ததும், கஜபதிசிங்கும் வேணுவும் வந்தனஞ் செலுத்தினார்கள். இன்ஸ்பெக்டரும் பதில் வந்தனஞ் செலுத்திவிட்டு ஓராசனத்திலமர்ந்தார்.

கஜபதிசிங் "இன்ஸ்பெக்டரவர்களே! நாங்கள் சீட்டாடுவதற்காகக் கைதிசெய்ய வந்திருக்கின்றீர்களோ?" என்று சிறித்துக்கொண்டே வினவினார்.

**இன்ஸ்பெக்டர்**:—கேலிசெய்யவேண்டாம். நான் லலிதா பாங்கு மர்மக் கொள்ளையை உளவறிந்துகொண்டிருக்கின்றேன். இன்று முற்பகல் நீங்கள் பவானிப்பூர் சென்றிருந்ததாயும், பிரதம நிர்வாக உத்தியோகஸ்தருடன் இக் களவு விஷயமாய் உரையாடிக் கொண்டிருந்ததாயும் என்னுடைய உதவி உத்தியோகஸ்தர் கூறினார். அவ் விஷயமாகவே உங்களை நான் பார்க்க வந்திருக்கின்றேன். கொள்ளை நடந்தமாதிரியை நன்கு கவனித்தீர்களல்லவா?

**கஜபதிசிங்**:—கவனித்தேன். சாதாரணமான களவல்ல. இதுவரை நடந்திராதது; நவீன முறைகளுடன் கூடியது.

**இன்ஸ்பெக்டர்**:-உங்களுக்கு ஏதாவது துப்புத் துலங்கிற்றா?

**கஜபதிசிங்**:—நீங்கள் அறிந்திருப்பதைவிட அதிகமாக நான் அறிந்துகொள்ள முடியவில்லை. திருடர்களின் அங்க

அடையாளம் நமக்கு நன்றாகத் தெரியும். அதைப் பற்றி நம்மிருவருக்கும் மாறுபட்ட எண்ணங்கள் இருக்கமுடியாது. அநேக வாரங்களாக அவ்விருவரும் கார்ன்வாலிஸ் ரோட்டிலேயே (Cornwallis Road) இருந்துவந்திருக்கின்றனர். ஒருவன் நெட்டையானவன்; கட்டுவிடாத தேகமும், நீண்ட மீசையுமுடையவன். மற்றவன் சிறிது மெலிந்தவன்; குள்ளம்; மீசை கிடையாது. அவர்களுடைய செய்கைகள் ரசாயன முறைப்படி நடந்திருக்கின்றன. கட்டாயமாய் இதற்கு முன்பே அவர்கள் திருடர்களாயிருந்திருக்க வேண்டும். பலவருடங்களாக பழகியதின் பயனாகவே கொள்ளையை நடத்தியிருக்கவேண்டும். இவைகளே நான் அறிந்துகொண்ட விஷயங்கள்.

இன்ஸ்பெக்டர் :—(மீசையைத் திருகிக்கொண்டு) இந்நகரிலுள்ள பிரபல திருடர்களின் படங்களும், அவர்கள் செய்திருக்குங் குற்றங்களும், அவைகளுக்காக அடைந்த தண்டனையும், இப்பொழுது அவர்களிருக்கு மிடங்களையுங் குறித்திருக்கிற ஜாப்தாவொன்றைத் தருகின்றேன். நீங்கள் ஊகிக்கின்றபடி இவ்விருவரும் பழைய திருடர்களாகத்தானிருக்கவேண்டும். சில வருடங்களாக திருட்டுத் தொழில் நடத்தாமலிருந்திருக்கலாம். ஏராளமான பொருளுக்காக லலிதாபாங்கைக் கொள்ளையடிக்கவேண்டுமென்று அவர்கள் காத்திருந்திருக்க வேண்டும்.

கஜபதிசிங்:—அவர்களுடைய மோட்டார் சென்றவழியைப் போலீசார் பின்பற்றிச் செல்வதனால் ஒருபயனும் ஏற்படாது. அது ஒரு மூடக் கொள்கை. பவானிப்பூருக்குச் சென்றபிறகு அவர்கள் மோட்டாருடன் இந்நகரினின்றும் வெளியேறியிருக்கலாம். அவர்களால் மோட்டாரை ஒளித்துவைத்திருக்கமுடியாது. மோட்டாரின் பாகங்களைக் கழற்றி ஹூக்ளி (Hoogly) நதியில் எறிந்திருக்கலாம். மேலும் அவர்கள் இந்நகரிலேயே இருக்கமாட்டார்கள்.



இன்ஸ்பெக்டர்:—(கோபத்துடன்) கடலில் விழுந்து இறக்க வேண்டியதுதான். இந்நகரைவிட்டுஅவர்கள் வெளியே சென்றிருக்கமுடியாது. அவர்களுடைய புகைப்படங்களை ஒவ்வொரு ஜவான் (Constable) கையிலும் பார்க்கலாம். ஹௌரா முதலிய ஷ்டேஷன்களில் ஜவான்கள் மிகுந்த ஜாக்கிரதையுடன் சுற்றிக்கொண்டிருக்கின்றனர். ரயில்வே போலீஸ் இலாகாக் கிளைகளுக்கும் செய்தி போயிருக்கின்றது.

கஜபதிசிங் :—துறைமுகம் வழியாய் வெளியே சென்றால்—

இன்ஸ்பெக்டர்:—இனிமேல் சனிக்கிழமைகாலைதான் அயல் நாடுகளுக்குச் செல்லும் கப்பல்கள் புறப்படும். இருந்தபோதிலும் துறைமுகத்திலும் இரண்டு சப் இன்ஸ்பெக்டர்களை நிறுத்தியிருக்கின்றேன்.

கஜபதிசிங் :—(சிறிதுநேரம் ஆழ்ந்த யோசனையிலிருந்துவிட்டு) ராம்சிங் என்ற திருடன் டில்லி ஹிந்துஸ்தான் பாங்கு கொள்ளையில் சம்பந்தப்பட்டவனென்றே நினைக்கின்றேன். ஏனெனில் டில்லி ஹிந்துஸ்தான் பாங்கு கொள்ளையும் மின்சாரவேலையினாலேயே நடந்தது. அவனுடைய பெயர் தீபநாராயணன். மேலும் தீபநாராயணன் பம்பாய் மின்சாரக் கல்லூரியில் மூன்று வருடம் மாணவனாகப் பயின்றிருக்கின்றான். ஆனால் சமீபகாலத்தில் அவன் அமெரிக்காவிற்குச் சென்றுவிட்டதாகத் துறைமுகப் போலீசார் எழுதி வைத்திருக்கின்றனர்.

இன்ஸ்பெக்டர்:—நானும் அவ்வாறே நினைத்தேன். நம்மாலியன்றமட்டும் பார்ப்போம். முயற்சியுடையார் இகழ்ச்சியடையார். மேலும் இத் திருடர்களுடைய மோட்டார் போலீஸ் பார்வையில் வெகுநேரம் ஓடமுடியாது. சீக்கிரம் நான் தலைமை ஆபீசுக்குச் செல்ல வேண்டுமாதலால் விடைபெற்றுக்கொள்கின்றேன்.

கஜபதிசிங் :—**Thanks ! Good-Bye !**

இன்ஸ்பெக்டர் ஜாக்சன் வேணுவுக்கும் வந்தனஞ் செலுத்திவிட்டுப் புறப்பட்டார்.

கஜபதிசிங் “வேணு! இது பிரமாதமான காரியமல்ல. போலீசாருக்கு உண்மை கண்டுபிடிக்கத் தெரியாது. ராம்சிங்கும் சுந்தரலாலும் கஜபதிசிங்கின் கரத்தில்தான் சிக்குவார்கள் இக்கேசில் உன்னுடைய உதவி வேண்டாம். நீ சுகமாய் ஊர் சுற்றிக்கொண்டிரு. நான் சென்றுவிட்டு இரவில் வருகின்றேன்.” என்று கூறி விடைபெற்றுக்கொண்டு மோட்டாரில் லலிதா பாங்கை அடைந்தார்.

பொக்கிஷ அறையில் தென்படும் கள்ள வழிக்குள் இறங்கினார். சுமார் 40கஜதூரம் நீளமுள்ள அப் பாதையைக் கடந்து, நாவிதனின் குழி அறையை அடைந்தார். பின்பு அங்கிருந்து வெளியேறி அக் கடையின் முன்பாகத்தை அடைந்தார். எளிதில் துப்புக் கொடுக்கக்கூடிய பொருள்கள் யாவற்றையும் திருடர்கள் கொளுத்தியிருப்பதைக் கண்டு கஜபதிசிங் வியப்படைந்தார். அவர்களுடைய கையெழுத்தைக் காண்பிக்கக்கூடிய கடிதங்களோ அல்லது அவர்களை அடையாளங் கண்டுகொள்ளக்கூடிய ஆடைகளோ அவர் கண்களிற் புலனாகவில்லை. “இவர்கள் பழைய திருடர்களென்பதற்கு இதைக்காட்டிலும் சிறந்த ஆதாரங்கள் வேண்டுமோ?” என்று கூறிக்கொண்டே நன்றாக உற்றுப்பார்த்தார். தரையிலோ, சுவற்றிலோ, மேஜை நாற்காலிகளின் மீதிலோ பட்டிருக்கும் கைகால்களின் அடையாளங்களை அத் திருடர்கள் துணியினால் நன்றாகத் துடைத்திருப்பதைக் கண்டு ஆச்சரியங்கொண்டார். “விரலடையாளங்களின்மீது அதிக கவனஞ் செலுத்தியிருப்பதினால் இத் திருடர்கள் மிகவும் கைதேர்ந்தவர்களென்றே எண்ணவேண்டியிருக்கிறது” என்று கூறிக்கொண்டு இன்ஸ்பெக்டர் ஜாக்சன் கொடுத்த குறிப்பைப் பார்த்தார். கல்கத்தாவிலுள்ள எல்லாத் திருடர்களின் பெயர்களும், படங்களும், செய்கைகளும் அதில் தெளிவாகக் காணப்பட்டன. தீபநாராயணனின் பெயரும் ஹரிதாசரின் பெயருமே அப்பொழுது அவருடைய கவனத்தைக் கவர்ந்தன. தீப



நாராயணன் அமெரிக்கா சென்றுவிட்டதாகவும், ஹரிதாசர் களவுதொழிலை விட்டுவிட்டு வியாபாரம் நடத்திவருவதாயும், கஜபதிசிங் இன்ஸ்பெக்டரின் குறிப்பிலிருந்து அறிந்துகொண்டார். அங்கிருந்து திரும்பி பாங்கின் பொக்கிஷ அறைக்குச் சென்று தரையை உற்றுநோக்கினார். இரும்புப் பெட்டியின் பின்புரத்தில் அகன்ற கைகால்களின் அடையாளங்கள் காணப்பட்டன. கைகளில் கையணி அணியப்பட்டிருந்ததாகத் தோன்றிற்று. புழுதிபடிந்திருந்த சுவர்களில் இங்குமங்கும் ஒன்றிரண்டு விரல்களின் பிரதி காணப்பட்டது.

அங்கிருந்துவிட்டு கஜபதிசிங் மோட்டார் கம்பெனியை அடைந்தார். அம் மோட்டார் கம்பெனி அவ்வளவு பெரியதல்ல. சிறிய வியாபார ஸ்தலமே. மோட்டாரின் பல பாகங்கள் விலைக்குக் கிடைப்பதன்றியில் மோட்டார்களும் வாடகைக் ககப்படும். ஒரு மோட்டாரின் நஷ்டம் சொந்தக்காரரை அதிக நஷ்டத்தில் அமிழ்த்திவிட்டது. அவரை வரவழைத்து கஜபதிசிங் சம்பாஷணை புரிந்தார்.

கஜபதிசிங் :—மோட்டாரை வாடகைக்கு எடுத்துச் சென்ற சுந்தரலாலை நேற்றிரவுதான் உங்களுக்குத் தெரியவருமா? அல்லது இதற்குமுன்பே தெரியவருமா?

மோட்டார் சோந்தக்காரர் :—முன்பே அறிவேன். இதற்குமுன் அநேக தடவைகளில் அவர் மோட்டாரை வாடகைக்கு எடுத்துச் சென்றிருக்கிறார். வாடகையையும் உடனே கொடுத்துவிடுவார்.

கஜபதிசிங்:—மோட்டார் ஓட்டுவதற்கு அதிகாரப் பத்திரம் (License) வாங்கியிருப்பது உங்களுக்குத் தெரியவருமா?

மோட்டார் சோந்தக்காரர் :—பார்த்திருக்கின்றேன்.

கஜபதிசிங்:—‘கார்ன்வாலிஸ் ரோட் ராம்சிங்’ என்றுதானே எழுதியிருக்கின்றது?

மோட்டார் சோந்தக்காரர் :—இல்லை. ‘டம்டம் (Dum Dum) ராம்சிங்’ என்று எழுதியிருக்கின்றது. டம்

டமிலிருந்து கார்ன்வாலிஸ் ரோட்டுக்கு வந்து வாடகை மோட்டார் எடுப்பானேனென்று நான்கூட சந்தேகப் பட்டேன். ஒருக்கால் அவருக்கு இங்கு வியாபார ஸ்தலம் இருக்கலாம் என்று நினைத்துக்கொண்டிருந் தேன்.

மோட்டார் சொந்தக்காரர், சுந்தரலாலின் ஆடையைப் பற்றியும், கடையிலிருந்து மோட்டாரை நாவிதன் இருந்த கடைக்கு ஓட்டிச் சென்றதையும், சில மூட்டைகளை அதில் வைத்தபிறகு மோட்டாரை விரைவாகத் தென் பக்கம் ஓட்டிச் சென்றதையும் கஜபதிசிங்கிடம் விவரமாய் உரைத்தான்.

மோட்டார் கம்பெனியினின்றும் வெளியேறிய கஜபதிசிங், தபாலாபீசுக்குச் சென்று, சிகாகோ நகரத்து பிரதம போலீஸ் உத்தியோகஸ்தருக்கு, "பிரபல பாங்குகளை எளிதாகக் கொள்ளைபோடும் நீபநாராயணனென்ற மனிதன் அங்கு இருக்கின்றானா? உண்மையாகவே அங்கு இருக்கின்றானாவென்பதை அறியுங்கள். சில மாதங்களுக்கு முன்புதான் அவனும் அவனுடைய நண்பன் ராம்சேட்டும் இந்தியாவைவிட்டு சிகாகோ நகரம் சென்றதாகத் தெரியவருகிறது. அவ்விருவரும் இந்தியாவிலேயே இருப்பதாக நம்பப்படுவதால், ஜாக்கிரதையாய் உளவறிந்து 24மணிநேரத்திற்குள் பதிலளியுங்கள். உங்கள் உண்மையுள்ள கஜபதிசிங், சென்னைத் துப்பறிபவன், முகாம் கல்கத்தா." என்ற தந்தியை அனுப்பினார்.

கஜபதிசிங் திரும்பவும் லலிதா பாங்குக்குச் சென்று, சாட்டர்ஜியிடம் சம்பாஷித்துக்கொண்டிருந்தார். சுமார் 7.30 மணிக்கு அவர் தன் ஜாகையை அடைந்தார். இரவு 12மணிவரை வேணுவும் கஜபதிசிங்கும் லலிதாபாங்கின் மாயக் கொள்ளையைப்பற்றி தீவிரமாக ஆலோசனை செய்துகொண்டிருந்தனர். கஜபதிசிங் தன் குறிப்புக்களைப் பன்முறை படித்துப் பார்த்தார். மோட்டார் லைசென்ஸின் மீதே அவர் முழு கவனத்தையுஞ் செலுத்தினார். பிறகு அவர் "வேணு! லைசென்ஸானது டம்டம் பிரதேசத்தில்



ராம்சிங் என்ற யோக்கியமான மனிதருக்குக் கொடுத்திருக்கவேண்டும். அவரை நாளைக் காலை பார்த்துப் பேசவேண்டும்" என்று கூறிக்கொண்டே படுக்கச் சென்றார்.

மறுநாட் காலையில கஜபதிசிங் பவானிபூர் சென்று புலன் விசாரித்தார். பவானிப்பூர் பெரிய ஹோட்டலுக்குத் திருடர்கள் சென்று காப்பி சாப்பிட்டதும், மோட்டாரின் சக்கரங்களை மாற்றினதும், போலீசாரை ஏமாற்ற எண்ணங்கொண்டுதானென்று கஜபதிசிங் ஊகித்துக் கொண்டார்.

அங்கிருந்து டம்டம் (Dum Dum) நோக்கிப் புறப்பட்டார். இரண்டுமணி நேரத்தில் டம்டம் போலீஸ் ஸ்டேஷனை அடைந்து உத்தியோகஸ்தருடன் ராம்சிங்கைப் பற்றிப் பேசலானார். டம்டமில் ராம்சிங் என்றொரு வக்கீலிருந்தார். அவர் சொந்தமோட்டாரும் வைத்திருந்தார்.

லலிதா பாங்கின் களவு சம்பந்தமாய ராம்சிங்கைப் பற்றி கஜபதிசிங் கேட்டதும், போலீஸ் உத்தியோகஸ்தர் கோபமடைந்து, "துப்பறியும் கனவானே! உங்களுடைய மூளைபோல் உள்ள மனிதரை நான் இதுகாறும் பார்த்தது கிடையாது. ஓர் பெயர்பெற்ற வக்கீலையா கொள்ளைக்காரனென்று நினைக்கின்றீர்கள். நீங்களெல்லாம் துப்பறிய வந்துதான் இந்த இலாகாவே கெட்டுப்போய்விட்டது. சலாம்! போய்வாருங்கள்." என்று அகந்தையுடன் பேசினார்.

கஜபதிசிங் "என்னைப்பற்றி இகழ்ந்துரைக்க உங்களுக்கு தைரியம் வந்ததற்கு நான் ஆச்சரியப்படுகின்றேன். என் பெயர் அச்சடித்த கடிதத்தைப் பாருங்கள்." என்று அடியிற்கண்டபடி தன் பெயர் அச்சடித்திருக்கும் கடிதத் துண்டைக் கொடுத்தார்:—

S. GAJAPATHY SINGH, B. A.,
Detective and Specialist in Criminology,
Justice ", Mount Road,
MADRAS.

அதைப் பார்த்ததும் போலீஸ் உத்தியோகஸ்தர் திணறித் திடுக்கிட்டுப் போனார். உடனே அவர் "மன்னிக்க வேண்டும். இயற்கையாக எனக்குக் கோபங்கிடையாது. இந்தவேலை பார்ப்பதைவிட ஒரு முழநீளங் கயிற்றை வாங்கிக்கொண்டு தணிந்த மரந்தேடிச் செல்லலாம். என்ன செய்யலாம்? வயற்றுப் பிழைப்பு. மேஜையைப் பாருங்கள். இருநூறு கடிதங்கள். இந்த வேலையின் தொந்தரவால் உங்களிடம் சற்று மரியாதைக் குறைவாய்ப் பேசிவிட்டேன். மன்னிக்கவேண்டும். இனிமேல் உங்களுடைய கட்டளையைக் கவனத்துடன் கேட்டு நடக்கின்றேன்." என்றார்.

கஜபதிசிங் "எல்லா போலீஸ் உத்தியோகஸ்தர்களும் இம்மாதிரி பேசுவது வழக்கந்தான். என்னிடம் சாவதானமாயும் இன்பமாயும் உரையாடி, என் கட்டளையை முடிப்பீர்களானால், சர்க்கார் மாத்திரம் உங்களுக்கு வெகுமதி அளிப்பதன்னியில், நானும் வெகுமதி கொடுப்பேன். லலிதா பாங்கில் கொள்ளைபோட்ட திருடர்களைப் பிடித்துக் கொடுக்கும் மதிப்பையும், கௌரவத்தையும் நான் உங்களுக்கு அளிக்க விரும்பியிருக்கின்றேன். இன்ஸ்பெக்டர் ஜாக்சன் பகீரதப் பிரயத்தனம் பண்ணுகின்றார். அவர் வெற்றியடையமாட்டார். துப்பறியும் சிங்கம் நிச்சயமாய் வெற்றிபெறும். இப்பொழுது நான் சொல்வதைக் கவனமாய்க் கேட்கவேண்டும். வக்கீல் ராம்சிங்கின் மோட்டார் லைசன்ஸ் காணமற்போயிருக்கின்றதா?" என்றார்.

உத்தியோகஸ்தர் "ஆம். இரண்டுமாதங்களுக்குமுன்புதான். அதைப்பற்றி ராம்சிங் போலீஸ் ஸ்டேஷனுக்கு மனுச் செய்துகொண்டார். அதன்பேரில் அவருக்குப் புதிய லைசன்ஸ் கொடுக்கப்பட்டிருக்கின்றது. என்ன ஆச்சரியம்! இந்த விஷயம் உங்களுக்கு எப்படித் தெரியவந்தது?" என்றார்.

கஜபதிசிங் "இப்பொழுதே ராம்சிங்கை டெலிபோன் மூலமாய் ஸ்டேஷனுக்கு வரவழையுங்கள்." என்று கூறினார்.



உத்தியோகஸ்தர் டெலிபோனில் ராம்சிங்கைக் கூப்பிட்டு உடனே ஸ்டேஷனுக்கு வரவேண்டுமென்று சொன்னார். ராம்சிங் வரும்வரை கஜபதிசிங் போலீஸ் உத்தியோகஸ்தருடன் ஒருவார்த்தையும் பேசாமல் அன்றுகாலை வெளியான தினசரியைப் படித்துக்கொண்டிருந்தார். ராம்சிங் சிறிது நேரத்தில் அங்கு வந்தார்.

ராம்சிங்:—சப் இன்ஸ்பெக்டர் ஜெயராம்! வந்தனம்.

ஜெயராம்:—(ராம்சிங்குக்கு வந்தனஞ்செய்துவிட்டு) இவர் துப்பறியும் இலாகாவைச் சேர்ந்த கஜபதிசிங்.

ராம்சிங்:—என்ன? கஜபதிசிங்கா! இவரைப்பற்றி நான் பலதடவைகளில் ஜனங்கள் புகழ்ந்து பேசுவதைக் கேட்டிருக்கின்றேன். லலிதா பாங்கு கொள்ளை விஷயமாய் இவர் வேலைசெய்துவருவதையும் பேப்பர் மூலமாய் அறிந்தேன். கஜபதிசிங் அவர்களே! உங்களுடன் பேசுவதற்கு சந்தர்ப்பமேற்பட்டதற்காக கடவுளைப் போற்றுகின்றேன். இன்றிரவு என் வீட்டில் தாங்கள் விருந்துசெய்ய வரவேண்டும்.

கஜபதிசிங்:—சாப்பாட்டைப்பற்றி இப்பொழுது பேசுவதில் பயனில்லை. காரியம் முடிந்தபிறகு யோஜித்துக் கொள்ளலாம். உங்களுடைய மோட்டார் லைசன்ஸ் களவாடப்பட்டதா?

ராம்சிங்: - களவாடப்பட்டதாகச் சொல்லமுடியாது. கைதவறிப்போயிற்றென்றே சொல்லவேண்டும்.

கஜபதிசிங்:—கூடுமானவரை லைசன்ஸ் காணப்படாமற் போனதாக அறிந்த தேதியைக் கூறுங்கள். வேலைக்கு ஒரு ஆளை வைத்துக்கொண்டிருந்த தருணத்தில் தானே. அறிமுகமில்லாத புது மனிதன். அவன் குட்டையாக இருப்பான் அல்லவா?

ராம்சிங்:—இவைகளுக்கும் கொள்ளைக்கும் சம்பந்தமிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை.

கஜபதிசிங்:—சம்பந்தமிருக்கின்றதா இல்லையாவென்று அறிந்துகொள்ளவேண்டிய அவசியம் உங்களுக்குக்

கிடையாது. நான் கேட்ட கேள்விக்குத் தக்க பதில் தெரிந்தால் உரைக்கவேண்டியதுதான் உங்கள் கடமை. உங்கள் வீட்டில் வர்ணம் பூசவும், மேஜை நாற்காலி முதலியவைகளுக்கு வார்னீஷ் (Painting) அடிக்கவும், வேலைக்கமர்த்திக்கொள்ளப்பட்டவன் ஒருக்கால் நெட்டையாக இருக்கவேண்டும், அல்லது குட்டையாக இருக்கவேண்டும். அநேகமாய்க் குட்டையாகத்தானிருக்கவேண்டும். மீசை கிடையாது. இளம்பிராயத் தோற்றத்தையுடையவன். உங்களுடைய மோட்டார் லைசன்ஸைக் களவாடியதும் வேலையை விட்டு நீங்கிவிட்டான். அநேகமாய் உங்கள் சட்டையினின்றும் அதை எடுத்திருக்கவேண்டும்.

ராம்சிங் :—உண்மைதான்.

கஜபதிசிங் :—உங்களிடம் வேலைசெய்வதற்குமுன் அவன் டம்டமிலே இருந்துவந்தான். அவனுடைய பெயர் சாட்டர்ஜீ. வேலையைவிட்டு நீங்கியபிறகு அவனை நீங்கள் அடிக்கடி பார்த்தது கிடையாது. அவனைப்பற்றிக் கேள்விப்பட்டதும் கிடையாது. இவைகள் நடந்து சுமார் இரண்டுமாதகாலமிருக்கலாம். வேலையை விட்டு நீங்கிய மறுதினம் அவனுடன் ஓர் பெண்பிள்ளை சென்றுகொண்டிருப்பதை நீங்கள் பார்த்தீர்கள்.

ராம்சிங் :—இவைகளையெல்லாம் அறிந்த நீங்கள் உண்மையில் தேவனாகத்தானிருக்கவேண்டும். வேலையைவிட்டு சாட்டர்ஜீ எங்கு சென்றானென்று எனக்குத் தெரியாது. ஆனால் இரண்டுதினங்களுக்குப் பிறகு ஓர் மாலை நானும் எனது நண்பரும் நகரத்தைநோக்கி வந்துகொண்டிருக்கையில், சாட்டர்ஜீயும் அவனுடன் ஓர் மாதும் மோட்டாரில் சென்றுகொண்டிருந்தனர். அவனை அதற்குப் பிறகு நான் பார்த்தது கிடையாது.

அன்றிரவு ராம்சிங்குடன் போஜனமருந்த வருவதாகக் கூறி விடைபெற்றுக்கொண்டு, சப் இன்ஸ்பெக்டர்



ஜெயராமுக்குச் செய்தி சொல்லியனுப்புவதாகக் கூறிவிட்டு, கஜபதிசிங் அங்கிருந்து புறப்பட்டார். ராம்சிங்குக்கு மோட்டார் லைசன்ஸ் கைதவறிப்போனதைப்பற்றி ஒன்றுந் தெரியாமலிருந்ததற்காக கஜபதிசிங் வியப்படைந்தார். “ராம்சிங் ! அல்லது தீபநாராயணன்! உன் பெயர் எதுவாயினுஞ்சரி. கஜபதிசிங்கை ஏமாற்றிச் செல்லலாமென்று நினைத்துவிடாதே. லலிதா பாங்கின் வியாபாரத்தைக் கேள்வியுற்ற உனக்கு வெகுநாளாக அதைக் கொள்ளையடிக்க வேண்டுமென்ற விருப்பம் இருந்துவந்தது. கட்டிடவேலைக்கு நல்ல திறமையான மனிதர் வேண்டுமென்று லலிதா பாங்கு மானேஜர் விளம்பரஞ் செய்ததும் நீ வேலைக்குப் போயமர்ந்தாய். உன்னுடைய பழைய நண்பனையும் நீ மறந்தாயில்லை. டம்டமிலும் உன்னுடைய தந்திரத்தைக் காண்பித்துவிட்டாய். அது இனி கஜபதிசிங் கவனத்திற்குவந்ததால் ஓங்காது.” என்று கூறிக்கொண்டு கஜபதிசிங் சிகரெட் ஒன்றைக் கொளுத்தினார். அப்பொழுது பரபரப்புடன் ஒரு பையன் ஓடிவந்து அவரிடம் ஓர் தந்தியை அளித்தான். அது அமெரிக்காவிலிருந்து வந்தது. அதில் “தீபநாராயணன் என்ற மனிதரும் ராம்சேட் என்ற மனிதரும் இங்கிருப்பதாகக் கொஞ்சங்கூடத் தெரியவில்லை.” என்ற செய்தியைப் படித்ததும் கஜபதிசிங் சிறித்தார். அவர் உடனே அநேகம் வீதிகளைக் கடந்துகொண்டு பெரிய வீதியடைந்தார். அநேக மனிதர்களிடம் கேட்டதின் பயனாக, கஜபதிசிங் ஓர் சிறிய வீட்டின் வாயிற்படியை அடைந்து, அவ் வீட்டுச் சொந்தக்காரியை அழைத்து, “அம்மா ! ராம்சிங் வீட்டில் வேலைபார்த்துவந்த சாட்டர்ஜீ இங்குதானே குடியிருக்கின்றார் ?” என்றார்.

வீட்டுக்காரி “இல்லை. இவ் வீட்டைவிட்டுச் சென்று சுமார் 2 மாதகாலமாகிறது. அவரும் அவருடைய தாய்க்கும் இவ் வீடு காணவில்லையென்றும், அவருக்கு அலிப்பூரில் (Alipore) வேலை கிட்டிவிட்டதனால் அங்கு செல்வதே நலமென்றும் நினைத்து இரண்டுமாதங்களுக்குமுன்பே இவ் வீட்டைவிட்டுச் சென்றுவிட்டடார். அவருடைய குணத்

தைப்போலுள்ள மனிதர்களை நான் இதுகாறுங் கண்டதில்லை." என்றாள்.

கஜபதிசிங் "அவர்கள் அலிப்பூரில் இருக்குமிடந் தெரியுமா?" என்று வினவினார்.

வீட்டுகாரி "அவர் அங்கு ஓர் பெரிய பங்களாவில் வசிக்கின்றாராம். பங்களாவிற்குமுன் பெரிய தோட்டமொன்று இருக்கின்றதாம். இவைகளையெல்லாம் அலிப்பூருக்கு அடிக்கடி சென்றுவரும் பழ வியாபாரியிடமிருந்து அறிந்தேன்." என்றாள்.

கஜபதிசிங் "அதைப்பற்றி எனக்கு அவ்வளவு அக்கரை கிடையாது. நான் ஒரு இன்ஷூரன்ஸ் (Insurance) கம்பெனி ஏஜண்டு. அப் பழவியாபாரியின் விலாசத்தைச் சொல்வாயானால் மிகுந்த சந்தோஷம்." என்றார்.

அவ் வீட்டுக்காரியிடமிருந்து பழ வியாபாரியின் விலாசத்தை அறிந்துகொண்டு, அவளுக்கு ஐந்துரூபாய் நோட்டொன்றை அளித்துவிட்டு, பழவியாபாரியின் இருப்பிடத்தை நோக்கி கஜபதிசிங் சென்று அவரை விசாரித்தார்.

சாட்டர்ஜீயும், அவருடைய தாயாரும் அலிப்பூரிலிருந்து இரண்டுபர்லாங் தூரத்தில் ஒரு ரஸ்தாவின்மேலுள்ள பங்களாவில் வசித்துவருகிறார்களென்றும், அநேகமாய் அவர்களைத் தேடி ஒருவருஞ் செல்லமாட்டார்களென்றும், தான்கூட அவர்கள் பங்களாவிற்குட் சென்றது கிடையாதென்றும், பழவியாபாரி கூறி, சாட்டர்ஜீ அவருடைய தாய் முதலியவர்களின் தோற்றத்தையும் விவரமாய் எடுத்துரைத்தார்.

"என்ன ஆச்சரியம்! கல்கத்தா போலீசும், தேர்ச்சிபெற்ற மேனாட்டு துப்பர்சிங்கமும் இரண்டு நாய்களைப் பற்றித் தேடிக்கொண்டலைகின்றபொழுது, அவ்விரண்டு நாய்களும் சுகமாய் ஒரு பங்களாவில் இருந்துவருகின்றன. தாயாரும் மகனும் போன்று வேடந்தரித்தமாத்திரத்தில் கஜபதிசிங் ஏமார்ந்துவிடுவானென்றல்லவா தீபநாராயண



னும் ராம்சேட்டும் நினைத்துக்கொண்டிருக்கின்றனர். போலீசாரின் சோதனையெல்லாம் முடிந்தபிறகு அயல்நாடு சென்றுவிடலாமென்று எண்ணியிருக்கின்றனர்போலும்." என்று கஜபதிசிங் கூறிக்கொண்டே பழக்கடையினின்றும் புறப்பட்டு போலீஸ் ஸ்டேஷனை அடைந்து, சப் இன்ஸ்பெக்டர் ஜெயராமைத் தன்னைப் பின்பற்றி அரைமணி நேரத்தில் அலிப்பூர் ரஸ்தாவுக்கு வரச்சொல்லிவிட்டு, வாடகை மோட்டாரின் மூலமாய் அலிப்பூரை நோக்கிச் சென்றுகொண்டிருந்தார். "திருடர்களைத் திடீரென்று பிடிக்கவேண்டும். இல்லாவிட்டால் நோட்டுகளைத் தீக்கிரையாகச் செய்துவிடுவார்கள். அவர்கள் என்னுடைய கேள்விகளைப்பற்றி பழக்காரனிடமிருந்தாவது, வீட்டு சொந்தக்காரியிடமிருந்தாவது அறிந்துகொள்வார்களானால் மாறுவேடத்துடன் எங்கேனும் ஓடி ஒளிந்துகொள்வார்கள். திருடர்களிடம் அஜாக்கிரதையாக இருந்துவிட்டால் உயிருக்கே ஆபத்து வந்துவிடும் (It is often fatal to underrate the enemy)." என்று நினைத்து, மோட்டார் ஓட்டியை நோக்கி, "நான் சொன்ன பங்களாவின் முன்பு நிறுத்தவேண்டும்" என்றார். வண்டியிற் சென்றுகொண்டிருந்தபொழுதே கஜபதிசிங் தன்னுடைய போலீஸ் உடைகளை மாற்றிக்கொண்டார்.

வண்டியும் சாட்டர்ஜீயின் பங்களாவை அடைந்தது. நேர்த்தியான பங்களா. அதன் முன்புரத்தில் பூந்தோட்டங் காணப்பட்டது. நெட்டையான மனிதனொருவன் தோட்டத்தின் முன்பு பூச்செடிகளை வெட்டிக் கொத்தி ஒழுங்குசெய்துகொண்டிருந்தான். மோட்டார் பங்களாவின் முன்வந்து நின்றதும், அம் மனிதனும் திடீரென்று வேலையை நிறுத்திவிட்டு மோட்டாரைக் கவனித்தான். அவனைப் பார்த்ததும், "ஆ! பிரபல கொள்ளைக்காரன் தீபநாராயணன்!" என்று மெதுவாகக் கூறி, கஜபதிசிங் பெருமூச்சுவிட்டார். கஜபதிசிங் மோட்டாரோட்டியிடம், "கீழிறங்கி அம் மனிதனை இங்கு வரச்சொல். நான் இந்த வீட்டின் சொந்தக்காரன். வாடகை பாக்கி இருக்கின்றது. அம் மனிதன் இங்குவந்ததும் ஏதாவது அற்புதமான காரியம்

நடந்தாலும் திடுக்கிடாதே. உனக்கு ஒரு பவுன் பரிசு கிடைக்கும். தைரியமாகச் செல்.” என்று கூறினார்.

மோட்டாரோட்டி, அம் மனிதனிடம், பங்களா சொந்தக்காரர் அவரைப் பார்க்க வந்திருப்பதாயும், மோட்டாரில் இருக்கின்றாரென்றும் சொன்னதும், சிறிதுகூட சந்தேகப்படாமல் அம் மனிதன் மோட்டாரை நோக்கி வந்தான். வாடகை கொடுக்கவில்லையென்பதை அவன் நன்கு அறிவானாதால் மோட்டாரோட்டி கூறியதைப்பற்றி சந்தேகப்படமுடியாமற் போயிற்று. மோட்டாரை நெருங்கிய அம் மனிதன் திரையை அகற்றி உள்ளே எட்டிப் பார்த்ததும், கஜபதிசிங் அவனுடைய கரங்களைப்பற்றி மடமடவென இழுத்து, தான் தயாராக வைத்திருந்த விலங்குகளை கரங்களிலும் கால்களிலும் மாட்டி, “டிரைவர்! வண்டியை ஓட்டிக்கொண்டு அரை பர்லாங் தூரஞ் சென்று நிறுத்து. லவிதா பாங்கைக் கொள்ளையிட்ட மனிதர்களில் இவனொருவன். மற்றவனைத் தேடி நான் உள்ளே செல்கின்றேன். நீ அங்கு செல்லுமுன் டம்டம் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் ஜெயராம் எதிரே வருவார். அவருக்கு இப் பங்களாவைக் காட்டு. ஜாக்கிரதை.” என்று கூறி பங்களாவிற்குள் ஓடினார். அவருடைய மடியில் துப்பாக்கியொன்றிருந்தது. ராம்சேட் சிறந்த மல்யுத்தக்காரனானதால், அவன் எதிர்த்து நின்றால் தனக்கு பலமான ஜோலியிருக்குமென்று நினைத்துச் சென்றார் கஜபதிசிங்.

சீக்கிரத்தில் பங்களாவின் முதலறைக்குள் நுழைந்தார் கஜபதிசிங். பெண்வேடந்தரித்த ராம்சேட் அவர் முன் தோன்றினான். கஜபதிசிங்கைப் பார்த்து சந்தேகங்கொண்ட ராம்சேட், தனது பாவாடையைக் கிழித்தெறிந்துவிட்டு, “கஜபதிசிங்! நீ ஒரு பெரிய முட்டாள். என் நண்பனை நீ சிறைசெய்துவிட்டாய். அதைப்பற்றி எனக்கு அதிக அக்கரையில்லை. இதோ பார் துப்பாக்கியை. ராம்சேட்டின் குறி தப்பாது. கடவுளைத் தொழுவதற்குக்கூட உனக்கு அவகாசமளியேன். பாவம்!” என்று கூறி கர்ஜித்தான்.



படீர்! ஓர் குண்டு கஜபதிசிங்கின் தலைக்குமேல் சென்றது. படீர்! இரண்டாங் குண்டு கஜபதியின் தொப்பியை (Hat) கீழே வீழ்த்திற்று. கஜபதிசிங் சிறுத்தைப்புலி போலப் பாய்ந்து ராம்சேட்டின் கழுத்தை அமுக்கிப் பிடித்தார். அவனுடைய கரத்திலிருந்த துப்பாக்கி கீழே விழுந்தது. அதைக் காலால் தள்ளிப் பார்க்க குண்டில்லாததாகக் காணப்பட்டது. கஜபதிசிங்கின் கரத்தினின்றும் ராம்சேட் திமிறிக்கொண்டு நாற்காலியைத் தூக்கி எறிந்தான். இடதுகையால் கஜபதிசிங் அதைக் கீழேவிழச்செய்து, திரும்பவும் அவன்மேற் பாய்ந்து, கட்டிக்கொண்டார். “அடே! கொடிய திருடா! திமிறாதே. உன் மண்டை பிளந்துவிடும். இதோ பார்.” என்று 6 அறைகளையுடைய தன்னுடைய ரிவால்வரைக் (Six chambered revolvor) காட்டினார். ராம்சேட் தனது காலால் அதைத் தட்ட முயன்ற சமயம், கஜபதிசிங்கின் ரிவால்வர் ‘டப்’ பென்று சத்தஞ் செய்தது. ராம்சேட் பிணம்போல் கீழே புரண்டான். உடனே அவனுக்கும் விலங்கிடப்பட்டது.

இச்சம்பவம் நடந்த இரண்டு நிமிடங்களுக்குப் பிறகு கஜபதிசிங் ஓர் மண்வெட்டியுடன் பங்களாவின் முன்புறத் தோட்டத்தில் குழியொன்று வெட்டிக்கொண்டிருந்தார். ‘பம்’ ‘பம்’ என்று சப்தத்துடன் இரு மோட்டார் வண்டிகள் பங்களாவின் முன் வந்து நின்றது. சப் இன்ஸ்பெக்டர் ஜெயராமும் இரண்டு டசன் ஜவான்களும் ஓடிவந்து கஜபதிசிங் செய்துகொண்டிருக்கும் வேலையைப் பார்த்துச் சிறித்தனர்.

கஜபதிசிங் “ஜெயராம்! சிறிக்கவேண்டாம். இதோ பாருங்கள்.” என்றுசொல்லி பூமியிலிருந்து பெரிய இரும்புப் பெட்டியைப் பிறட்டி அதனின்றும் பைகளை வெளியே எடுத்தார்.

சப் இன்ஸ்பெக்டர் :—அறிந்துகொண்டேன். அவைகளை நான் பத்திரமாய் கார்ன்வாலிஸ் ரோட்டுக்குக்கொண்டு வந்து சேர்க்கின்றேன். நீங்கள் மிகவும் களைப்படைந்

திருக்கிறபடியால் முதலிற் செல்லுங்கள். நான் ரிபோர்ட் (Report) தயார்செய்துகொண்டு வருகின்றேன்.

கஜபதிசிங் :—Thanks! கைதிகளைப்பற்றி ஜாக்கிரதையாயிருங்கள்.

இரண்டுமணி நேரத்தில் துப்பறியும் கஜபதிசிங்கும் வேணுவும் லலிதா பாங்கு கட்டிடத்திற்குள் நுழைந்தனர். அங்கு இன்ஸ்பெக்டர் ஜாக்சனும் பிரதம நிர்வாக உத்தியோகஸ்தரும் சம்பாஷித்துக்கொண்டிருந்தனர். நமது நண்பர்களைக் கண்டதும் ஜாக்சன் அவர்களுக்கு ஆசனமளித்து, "கஜபதிசிங்! மோட்டாரைக் கண்டுபிடித்துவிட்டேன். ஹூக்ளி நதியினடியில் பாகம் பாகமாகக் காணப்பட்டது." என்றார். கஜபதிசிங் சிறித்துக்கொண்டு புகைகுடிக்க ஆரம்பித்தார்.

அவர்கள் யாவரும் இன்பமாய் உரையாடிக்கொண்டிருக்கையில் பாங்கின் முன்பு மூன்று மோட்டார் வண்டிகள் வந்து நின்றன. சப் இன்ஸ்பெக்டர் ஜெயராம், வக்கீல் ராம் சிங் முதலியவர்கள் இறங்கினர். இன்ஸ்பெக்டர் ஜாக்சனும், சாட்டர்ஜீயும், வேணுவும் திகைத்துப்போயினர். ஐந்தாறு மூட்டைகளைக் கொண்டுவந்து போலீஸ் ஜவான்கள் கஜபதிசிங்கின் முன்னிலையில் வைத்தனர். அதை கஜபதிசிங் உடைத்ததும், "என்ன ஆச்சரியம்! காணாமற்போன பொருள்களன்றோ இவைகள். நகைகளும், நோட்டுகளும் அப்படியே காணப்படுகின்றன. கஜபதிசிங்! இதுவென்ன கனவா?" என்று சாட்டர்ஜீ ஆச்சரியத்துடன் கூறினார்.

கஜபதிசிங் :—பணத்தைக் கண்டுபிடித்துவிட்டேன்.

இன்ஸ்பெக்டர் ஜாக்சன்:—உண்மையாகவா? திருடர்கள்?

சப் இன்ஸ்பெக்டர் ஜெயராம் :—மோட்டாரில் இருக்கின்றனர். ஒருவன் பலமாக சுடப்பட்டிருக்கின்றான்.

உடனே யாவரும் மோட்டாரை நோக்கி ஓடினர். ஆனால் கஜபதிசிங் மாத்திரம் பணத்தை எண்ணிக்கொண்டிருந்தார்.

*        *        *        *        *



கஜபதிசிங், இன்ஸ்பெக்டர் ஜாக்சன், வேணுமுதலியவர்களுக்கு அன்றிரவு அட்வகேட் ராம்சிங் பெரிய விருந்தொன்று அளித்தார். விருந்து முடிந்ததும் கஜபதிசிங் அன்று தான் செய்த வேலையைப்பற்றி சந்தோஷமாக அவர்களுக்கு எடுத்துரைத்தார். தானும் கஜபதிசிங்குடன் அன்று செல்லாம விருந்ததற்காக வேணு பெரிதும் வருத்தமடைந்தான்.

**சுபம்!        சுபம்!!        சுபம்!!!**

# கங்கா தரன்

ஓர் சிறந்த நாவல்

**P. கும்பேசுவரன்**

Authour of **SABESAN** etc.

இயற்றியது

பாலவித்யா ஜர்னல் 2வது ஆண்டு (1931 ஜனவரி)
1வது ஸஞ்சிகையிலிருந்து தொடர்ச்சியாய்
வெளிவரும்.

நேயர்கள் சந்தாதாரர்களாக சேர்ந்து ஆதரிக்கும்படி
கோரப்படுகிறது.

---

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

*பாலவித்யா ஜர்னலில் முதல் வருஷத்தில்
முடிவடைந்த*

## 'சபேசன்'

*என்னும் அதி ஆச்சரியமான திடுக்கிடும் சூழ்ச்சிகளும், காதல் மாட்சிகளும், கற்பின் விசேஷமும், துப்பறியும் தீரமும் நிறைந்து, நவரஸங்களும் அமைந்த இனிய தமிழ் நாவல்.*

விலை ரூ 1—8—0.

பாலவித்யா ஜர்னலில் 2வது ஆண்டில் சேரும் புதிய சந்தாதாரர்கள் ஷை நாவலுக்கு ஆர்டர் செய்தால் தபாற் சிலவு இல்லாமல் பெற்றுக்கொள்ளலாம்.

**பாலவித்யா ஆபீஸ்,**
கும்பகோணம்.

துரை கொடுத்த துப்பாக்கியை கவனமாகப் பரிசோதித்து கொண்டிருந்தான். திடீரென்று, 'நான் என்னுடைய தீர்மானத்தில் தவறாமல் இப்பொழுது ஓர் ஆச்சரியமான செய்தி கூறப் போகிறேன். அதாவது, ஜெயராமுக்கும், ஜமீன்தார் கிருஷ்ணசாமி நாயுடு சுட்டுக் கொல்லப்பட்டதற்கும், யாதொரு சம்பந்தமுமில்லை அவரைக் கொன்ற கொலையாளி வேறு ஒருவனே.' என்றான்.

இதைக்கேட்ட போலீஸ்புலி பீப்பாய்துரை பிரமித்து விட்டார். ஜயஸிங், அவரது பதிலையும் எதிர்பாராது, வெளியே காத்துக்கொண்டிருந்த டாக்டர் நடராஜனுடன் காரிலேறி, அதை கிருஷ்ணசாமி நாயுடு கொலைசெய்யப்பட்ட 'கணபதி விலாஸ்'த்தை நோக்கிச் செலுத்தினான்.

* * * * *

## கொலையாளி யார்? துப்பறிவோன் ஆராய்ச்சி.

டாக்டர் நடராஜனும், துப்பறியும் ஜயசிங்கும், சற்று நேரத்தில் 'கணபதி விலாஸத்தை' யடைந்தனர். இருவரும் நேரே கொலை நடந்த அறையை நோக்கி நடந்தனர். டாக்டர், ஜமீன்தார் கிருஷ்ணசாமி நாயுடுவின் உடலை கவனமாகச் சோதிக்கவாரம்பித்தார். அப்பொழுது ஜயஸிங் மிகக்கூர்மையாக கொலைநடந்த அறையைச் சோதிக்க எண்ணினான். தரையின்மீது விரிக்கப்பட்டிருந்த உயர்ந்த ரத்தினக்கம்பளத்தில், பலருடைய காலடிகள் குழப்பமாகக் காணப்பட்டன. இந்த இரட்டைக்கொலையானது ஒருவித பரபரப்பை உண்டாக்கிவிட்டது. அதனாலேயே பலர் அந்த அறையில் வந்ததால், பல மண்பதிந்த காலடிகள் விளக்கமாகப் பதிந்திருந்தன அங்கிருந்த நாற்காலிகளும், மேஜைகளும் பலவாறாக தாறுமாறாகக் கிடந்தன. இவைகளெல்லாம் அங்கு கூடின ஜனக்கூட்டம் செய்ததெனத் தெரிகிறது என்று ஜயஸிங் ஒருவித தீர்மானத்திற்கு வந்தான்.

அப்பொழுது டாக்டர், "வெங்கடாங்கத்தின் கொலையைப்பற்றி ஒன்றும் கவலையில்லை. இறந்த ஜமீன்தார்



கிருஷ்ணசாமி நாயுடுவின் இரும்புபோன்ற கைகளால் வெங்கடாங்கத்தின் கழுத்து நெருக்கப்பட்டதாலேயே, அவன் இறந்தான். அதற்காக ஒருவரையும் தண்டிப்பதற்கில்லை. வெங்கடாங்கத்தின் கழுத்தை கிருஷ்ணசாமி நாயுடுவின் கைப்பிடிப்பிலிருந்து நீக்குவதற்கு மிகுந்த கஷ்டமாய்விட்டது." என்றார்.

அச்சமயம் ஜயஸிங், சுவற்றிலிருந்து ஏதோ ஒன்றை மிகுந்த சிரமத்துடன் தோண்டிக்கொண்டிருந்தான். அதை வெளியிலெடுத்ததும், "ஆ! இதுவே கிருஷ்ணசாமி நாயுடுவின் உடலின்வழியாக ஊடுருவிப்பாய்ந்து, எதிரிலிருந்த சுவற்றில் அழுந்திவிட்டது." என்றான்.

அதை டாக்டர் வாங்கிச் சோதித்து, அவர் முதுகில் ஏற்பட்டிருந்த குண்டு பாய்ந்த காயத்திற்கும் அதற்கும் ஒப்பிட்டுப்பார்த்தபின், "ஆம்; இதுவே ஜமீன்தார் கிருஷ்ணசாமி நாயுடுவைக் கொன்றது." என்றார். அதை நன்றாகத் தண்ணீரிலிட்டுக் கழுவியபின், ஜயஸிங்கிடம் அளித்தார். அதைக் கையில் வாங்கி உற்றுப்பார்த்ததும், ஜயஸிங் மிக்க திருப்தியடைந்தவனாய்ப் புன்னகை புரிந்தான். 'ஜமீன்தார் கிருஷ்ணசாமி நாயுடுவைக் கொன்றது ஜெயராம் அல்ல.' என்பது அவனுக்கு முன்பே நிச்சயமாகத் தெரியும். இப்பொழுது அவனுக்கு அதற்குத் தக்க சாக்ஷியமும் கிடைத்துவிட்டது.

இப்பொழுது ஜயஸிங் கையில் வைத்திருந்த, அதாவது, ஜமீன்தாரைக் கொன்ற குண்டானது, ஒரு நாற்பத்திநான்காவது எண்ணுள்ள துப்பாக்கியால் சுடப்பட்ட குண்டு. ஆனால் ஜமீன்தாருடைய கைத்துப்பாக்கியின் எண் 38. ஆகையால் அவர் அவருடைய துப்பக்கியால் சுட்டுக் கொல்லப்படவில்லை. அவரைக்கொன்றது வேறொரு துப்பாக்கி. அதை உடையவனை இனிக் கண்டுபிடிக்கவேண்டும் என்று ஜயஸிங் தீர்மானித்தான். அநேகமாய் அறையில் அவன் சோதனை முடிந்துவிட்டது. இனி சோதிக்க வேண்டிய இடம் சுற்றியிருக்கும் தோட்டமே. ஆகையால் ஜயஸிங் அதனுட் புகுந்தான். நேரே ஜெயராம்

கூறிய தோட்டத்தின் ஒரு மூலையை யடைந்தான். ஜெயராம் குறிப்பிட்ட இடத்தில் பூமியில் தோண்டிப் பார்க்கையில், அவ்விடத்தில் அந்த உயர்ந்த அதிர்ஷ்ட வைரமானது, அதனுடைய மெல்லிய பொற்சங்கிலியுடன் ஒரு கைக்குட்டையில் மடிக்கப்பட்டிருந்தது. ஜெயராம் கூறியவாறே அவ்விடம் முழுவதும் காகிதக்குப்பை கூளங்கள் எரிக்கப்படும் இடமே. எங்கும் குவியல் குவியலாகவிருந்த எரிந்த காகிதக்குப்பையின் மத்தியிலேயே வைரமும் புதைக்கப்பட்டிருந்தது.

"இக் கொடிய வைரத்தினாலேயே சில நிமிஷங்களுக்குள் இருபடுகொலைகள் நேரிட்டன. இன்னும் இதனுடைய முழு சரித்திரமும் எவ்வளவு விஷயங்களை விளக்குமோ? ஜமீன்தாருக்கு எவ்வித நெருங்கிய உறவினருமில்லையென்று தெரிகிறது. இவர் கோலார் தங்கச்சுரங்கத்திலிருந்து சில வருஷங்களுக்கு முன்பே இங்கு வந்து தங்கினாராகையால், அவரைப்பற்றிய முழுவிபரம் ஒருவருக்கும் தெரியாது. ஆகையால் அவருக்குப்பின் இந்த வைரம் சர்க்காருக்கே சேரவேண்டும்." என்றான் ஜயஸிங்.

'இன்னும், தரையையும், புதர்களையும், மாநிழல்களையுமே சோதிக்கவேண்டும். அதில் ஏதாவது துப்பு கிடைத்தால்தான் உண்டு. இன்றேல், வேறுவழியில் உழைக்க வேண்டுவதுதான். ஒரு விஷயம் நிச்சயமாகத் தெரிகிறது. கொலையாளி பின்புரவழியாகவே உள் வந்திருக்கவேண்டும். அது ஒன்றே திறந்திருந்ததென்று ஜெயராம் நிச்சயமாகக் கூறுகிறான். முதலில் கொலை நடந்த பின் உட்சென்றவர்களும், பின்புரவழியாகவே உட்சென்றிருக்கின்றனர். ஆதலின் கொலையாளி பின்புர வழியாகவே உட்புகுந்திருக்கவேண்டுமென்பதில் சந்தேகமில்லை. முன் பக்கமிருந்த ஜன்னல்களும், கதவுகளும் மூடப்பட்டிருந்தனவென்று ஜெயராம் உறுதியாகக் கூறுகிறான். இவையாவும் அதை நிச்சயப்படுத்துகின்றன. ஆகையால் பின்புரவழியிலிருந்து சோதிப்போம்' என்று ஜயஸிங் அங்



கிருந்து கொஞ்சம் கொஞ்சமாக தரையை உற்றுப்பார்த்துக்கொண்டே சென்றான். அப்பொழுது சில அசாதாரணமான காலடிகளைக் கண்டு அதைத் தொடர்ந்து சென்றான். அது பல புதர்களின் மறைவிலேயே சென்று, கடைசியில் தோட்டத்தின் வெளிப்புர பாதைவரை தெளிவாயிருந்து, பிறகு மறைந்துவிட்டது. ஆனால் இதில் ஒரு முக்கிய விசேஷமிருந்தது. சாதாரணமான காலடிகளைவிடச் சற்று அகன்று ஒன்றைவிட மற்றொன்று ஆழமாகப் பதிந்திருந்தது. இது ஒரு சரியான துப்புதான். யாரோ ஒருவன், புதர்களின் நிழல்களிலும், மா நிழலிலும் பதுங்கியவாறு உள்ளே வந்து, பிறகு வேகமாக அவனே வெளிச்சென்றிருக்கிறான் என்பது காலடிகளிலிருந்து தெளிவாகப் புலப்பட்டது. காலடிகளில் ஒன்று மற்றொன்றைக்காட்டிலும் சற்று ஆழமாகப் பதிந்திருந்தது ஆச்சரியத்தை உண்டாக்கியது. வலது காலடி சாதாரணமாயிருந்தது. இதிலிருந்து வலதுகாலைவிட இடதுகால் சற்று கனமானது என்றேற்பட்டது. ஆயினும் அது எப்படியிருக்கக்கூடும் என்பது ஜயஸிங்கின் கேள்வி.

'கொலையாளி, இவ் வழியே பின்புரமாய் வந்து உட்புகுந்து, ஜமீன்தார் வெங்கடரங்கத்துடன் இருந்த அறையின் கதவுக்குப் பக்கத்தில் ஒளிந்திருக்கவேண்டும். அப்படியானால் அவனுடைய நோக்கம் யாது? அநேகமாய் இவ்வைரமாய் இருக்கலாம் போலும்.' ஆனால் ஜெயராம், தங்கள் இருவரைத் தவிர வேறொருவருக்கும் தாங்கள் செய்யவிருந்த சூழ்ச்சி தெரியாது என்று உறுதியாகக் கூறுகிறான். அப்படியாயின் கொலைசெய்த மூன்றாம் மனிதன் யார்? அநேகமாய் அவனுக்கு இவர்கள் செய்யவிருந்த சூழ்ச்சி தெரிந்திருக்கலாம். எப்படியும் ஒருவித கெட்ட எண்ணம் கொண்டே அந்த மூன்றாம் மனிதன் உட்புகுந்திருக்கவேண்டும். இல்லாவிடில் அவன் மாநிழல்களில் பதுங்கிச்செல்வதற்கு நியாயமில்லை. ஆகவே அக்கொலையாளியின் இருப்பிடத்தைக் கண்டுபிடிக்கவேண்டுவதே முக்கியம். ஜயஸிங் கூடுமானவரையில் சுற்றுப்புறங்களில் விசாரித்துப்பார்த்தான். அவ்வாறு ஒருகாலைவிட மற்றொரு

காலைச் சற்று பலமாக ஊன்றி நடக்கும் எவரும் சமீபத்தில்லை யென்பது நிச்சயமாகியது. பிறகு ஜயஸிங் அப்பக்கங்களில் பல வருஷங்களாக உள்ள ஒரு குடியானவனைப் பார்த்து, 'சற்று திடகாத்ரசரீரமுடைய ஒருவன் சிறிது அழுத்தமாக ஒரு காலால் ஊன்றி நடப்பான். அநேகமாய் அவன் முழங்காலுக்குக் கீழே மரக்கால் வைத்திருப்பவன். அப்படிப்பட்ட மனிதன் யாராவது சமீபத்தில் வசித்துவருகிறானா?' என வினவினன். அதைக் கேட்ட முதியவன் அத்தகைய மனிதன் யாரும் சமீபத்திலில்லை என்று உறுதியாகக் கூறினான். இனி இங்கு அந்த மனிதனை தேடுவதில் பயனில்லை என்று நிச்சயித்துக்கொண்டு ஜயஸிங் திரும்பினான்.

டாக்டர் நடராஜனும் தன்னுடைய வேலையை முடித்துக்கொண்டு கார்த்திருந்தார். ஆகையால், மூவரும் காரிலேறி தம்முடைய வாசஸ்தலத்தை நோக்கிச் சென்றனர். டாக்டர் தன்னுடைய இடத்தை அடைந்தார். ஜயஸிங்கும் ஸ்ரீநிவாஸனும் தமது 'லக்ஷ்மீ விலாஸத்தை' அடைந்தனர். உடைகளைக் களைந்தபின், ஸ்நானம் செய்து பகற்போஜனமானதும் இருவரும் தமது அறையை அடைந்தனர். சற்று இளைப்பாறியபின், ஜயஸிங் பக்கத்திலிருந்த ஒரு அறையிற் புகுந்து, சாதாரண உடைகளையணிந்து வெளிவந்தான். தனக்கு, அப்பொழுது யாதொரு வேலையுமில்லை யென்பதை உணர்ந்த ஸ்ரீநிவாஸன், 'பிரஜானுகூலன்' பைண்டுவால்யூம் ஒன்றை யெடுத்துப் பிரித்து, 'காணாமற்போன ராகவனா' என்ற அனுபவ நீதிகதாவினோதம் ததும்பிய இனிய தமிழ் நவீனத்தைப் படிக்கலுற்றான்.

ஜயஸிங், வெளிக்கிளம்பி, நேரே ஜெயராம் குறிப்பிட்ட நவீன இந்து சிற்றுண்டிச்சாலையை நோக்கி மெதுவாக நடக்கலுற்றான். அப்பொழுது அவன், 'ஜெயராம் கூறியதிலிருந்து, அவர்களது சம்பாஷணை வேறு ஒருவருக்கும் தெரிந்திருப்பதற்கு நியாயமில்லை. ஆயினும் அவர்களது சூழ்ச்சியை அறிந்த வேறு ஒருவனிருக்கிறான். அவ



னே ஜமீன்தார் கிருஷ்ணசாமி நாயுடுவை சுட்டுக்கொன்றவனாயிருக்கவேண்டும். அவனுக்கு அநேகமாய் முழங்காலுக்குக் கீழே மரக்கால் இருக்கலாம். அவன் ஒருவித துர்எண்ணம் கொண்டே 'கணபதி விலாஸத்திற்குள்' நுழைந்திருக்கிறான். அவன், அங்கே மறைந்திருந்து, கடைசியில் அதை விட்டு தப்பித்து மறைந்துவிட்டான். இவையெல்லாம் அங்கே பதிந்திருந்த காலடிகளிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. அம்மனிதனும் 'கணபதி விலாஸ'த்தின் சுற்றுப்புறங்களில் வசிப்பவனல்ல. ஆகையால் அவன் அடுத்த ஊர் மனிதனாகவேயிருக்கவேண்டும். ஜெயராமும், வெங்கடராங்கமும் இந்த சிற்றுண்டிச்சாலையிலேயே தங்களது சூழ்ச்சியைப்பற்றி பேசியதாகத் தெரிவதால், அநேகமாய் அவர்களது பேச்சை யாராவது மறைந்து ஒட்டுக்கேட்டிருக்கலாம். அதிலும், அப்படிப்பட்ட விஷயம், பலர் வந்து கூடும் ஒரு சிற்றுண்டிச்சாலையில் சாதாரணமாய் நிகழக்கூடியதே. ஆனால் ஜெயராம் நாயுடு நிச்சயமாய் வேறு ஒருவரும் அங்கில்லை யென்று கூறுவதால், அநேகமாய் அந்தச் சிற்றுண்டிச்சாலையின் சிப்பந்திகள் யாராவது ஒட்டுக்கேட்டிருக்கலாம்' என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டு, சற்று விரைவாக நடந்து சிற்றுண்டிச்சாலையினுட் புகுந்து, ஜெயராம் நாயுடுவும், வெங்கடரங்கமும் உட்கார்ந்து காப்பி சாப்பிட்ட அதே அறைக்கே சென்று உட்கார்ந்தான். விசாலமும், கூர்மையும் நிறைந்ததான தன் கண்களால் அந்த அறை முற்றும் ஆராய்ந்தான். அந்த அறைக்குப் பக்கத்தில் இருப்பது, சாமான்கள் சேகரித்துவைக்கும் அறையென்பதை ஜயஸிங் தெரிந்துகொண்டான். அதிலிருந்து கேட்டால், இந்த அறையிலிருந்து பேசுவோரது சம்பாஷணை எளிதில் கேட்கக்கூடியதாயிருந்தது. அதிலிருந்து கேட்கக்கூடியவர்கள் சிற்றுண்டிச்சாலையின் வேலையாட்களே என்பதும் நிச்சயமாயிற்று.

சற்று நேரத்துக்குள், அதே சிவந்த தடித்த அந்தச் சிறுவன் தோன்றி, 'என்ன வேண்டும்?' என்றான்.

'ஒரு சேர் காபி மட்டில்' என்றான் ஜயஸிங். உடனே ஒரு சேர் காபி கொண்டுவந்து மேஜையின்மீது வைக்கப்பட்டது. ஜயஸிங் அதைப் பருகிவிட்டு, அச்சிறுவனை நோக்கி 'உன் எஜமானனைப் பார்க்கவேண்டும்' என்றான்.

'அப்படியாயின் என்பின் வாருங்கள்' என்றான் அந்தணச் சிறுவன்.

அந்தச் சிற்றுண்டிச்சாலையின் சொந்தக்காரர் அறையைக் காட்டிவிட்டு அச்சிறுவன் சென்றான். அவருக்குச் சுமார் நாற்பது வயதிருக்கலாம். அவருடைய உடல் சிவந்து பருத்திருந்தது. நெற்றியிலும், உடலிலும் பட்டை பட்டையாய் விபூதி யணிந்திருந்தார். ஜயஸிங் அவருக்கு வந்தனமளித்தபின் அங்கிருந்த நாற்காலி யொன்றில் உட்கார்ந்தான். மிகவும் இரகசியமாகத் தான் யாரென்று அவருக்குத் தெரிவித்து, தன்னுடைய பொற் பதக்கத்தையும் அவருக்குக் காட்டினான்.

வந்தவன் யாரென்பதை எளிதில் உணர்ந்துகொண்டு அவர், தன்னால் ஆகவேண்டிய காரியம் எதுவாக விருந்தாலும் தான் முடித்துக்கொடுப்பதாகச் சொன்னார்.

ஜயஸிங்:— மரக்காலுடைய சிப்பந்திகள் யாராவது இங்கிருக்கிறார்களா?

ஹோட்டல்காரர்:— ஆம் ஒருவன் இருக்கிறான். அவன் பெயர் 'பாலாஜி ராவ்' என்பது. ஏன்? தாங்கள் அவனைப் பார்க்கவேண்டுமோ? அவன் இப்பொழுது சமையலறையி லிருக்கிறான்.

ஜயஸிங் :— ஆம். நான் அவனைப் பார்த்துப் பேசவேண்டும். அவன் எங்கு வசிப்பது?

ஹோட்டல்காரர்:— இங்கேயே மேல்மாடியில், ஒரு சிறு அறை வைத்திருக்கிறான். நம் மிருவருக்குள் இருக்கட்டும்; ஒரு ரகசிய செய்தி. அதாவது அவனை இங்கிருந்து நீக்கிவிட்டால், எனக்குப் பரம திருப்தி. அவன் செய்கைகள் சில சமயம் சந்தேகத்தை விளைவிக்கின்றன. ஒரு கூரிய கத்தியும் அவன் வைத்



திருப்பதாக மற்ற வேலைக்காரர்கள் தெரிவிக்கின்றனர்.

ஜயஸிங்:— சரிதான். அப்படியாயின் நான் அவனை ஜாக்கிரதையாக சந்திக்கவேண்டும். என்னை அவன் இருக்குமிடத்துக்கு அழைத்துப்போகவேண்டும். ஒரு கத்தி வைத்திருப்பதாகத் தாங்கள் கூறுவதால், அநேகமாய் ஒரு துப்பாக்கியும் அவன் வைத்திருக்கக் கூடுமோ?

ஹோட்டல்காரர்:— ஆமாம். நான் மறந்தேவிட்டேன். ஒரு சுழல்துப்பாக்கியும் அவன் வைத்திருக்கிறான். உண்மையைச் சொல்லுகிறேன். எனக்கு அவனிடம் எதிர்த்துப்பேச பயந்தான். அவன் அப்படிப்பட்ட குணம் உள்ளவனாயிருக்கிறான். ஒரு மாதத்திற்கு முன்பு நான் அவனை வேலையைவிட்டு நீக்கிவிடுவதாகத் தெரிவித்தேன். அன்றிரவு குடித்துவிட்டு தாறுமாறாகப் பேசினான். ஆனால், அவன் சமையல்முறை வெகு அற்புதமானது. ஒவ்வொரு சிற்றுண்டியும் மிக்க இனிமையாகச் செய்யும் பக்குவம் தெரிந்தவனாயிருக்கிறான். அவனாலேயே என் வரும்படியும் இப்பொழுது அதிகரித்திருக்கிறது. அவனுக்கு மாதம் அறுபது ரூபாய் சம்பளம் கொடுத்துவருகிறேன்.

ஜயஸிங் தான் தேடிவந்த மனிதன் இவனே என்பதைத் தெரிந்துகொண்டான். தான் அவனைச் சந்திப்பதில் மிக்க ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்றும் அறிந்தான்.

உடனே இருவரும் பாலாஜி ராவ் வேலைசெய்துகொண்டிருந்த அறையை அடைந்தனர். அவன் எதிரே ஏராளமாக உருளைக்கிழங்குகள் குவிக்கப்பட்டிருந்தன. அவன் கீழே குனிந்தபடியே அவைகளை நறுக்கிக்கொண்டிருந்தபடியால் ஜயஸிங்கும், சொந்தக்காரரும் வந்ததை அவன் கவனிக்கவில்லை. அப்பொழுது சிற்றுண்டிச்சாலை அதிபர் 'பாலாஜி! உன்னைப் பார்க்க ஒருவர் வந்திருக்கிறார். உன்னிடம் சில

காரியங்கள் முடித்துக்கொள்ள அவர் விரும்புகிறார்.' என்றார்.

அப்பொழுது பாலாஜி எழுந்து இரண்டு மூன்றடிகள் முன்னுக்கு வந்தான். ஜயஸிங்கை உற்றுப்பார்த்தான். திடீரென்று அவன் முகம் கருத்தது. மிகுந்த முரட்டுத் தன்மையும், சரீரதிடனும், கூரியகண்களுமுடையவனாகக் காணப்பட்டான். அவன் பார்வையில் கொலைக்குறி தோன்றிற்று.

'நான் எதற்காக உன்னைத் தேடி வந்திருக்கிறேன் என்பதை நீ அறிந்திருப்பாய் என்று நினைக்கிறேன். சும்மா என்பின் வருகிறாயா? நான் உன்னை நேற்றிரவு 'கணபதி விலாஸ்'த்தில் ஜமீன்தார் கிருஷ்ணசாமி நாயுடுவை சுட்டுக் கொன்றதற்காகக் கைதிசெய்கிறேன்.' என்றான் ஜயஸிங்.

அப்பொழுது பாலாஜி தன் கையிலிருந்த கூரிய கத்தியைக் கடுங்கோபத்துடன் ஜயஸிங்கின்மீது குறிபார்த்து சுழற்றி எறிந்தான். ஜயஸிங் உடனே பக்கத்திலிருந்த ஒரு சிறு மரநாற்காலியால் அதைத் தடுக்கவும், அது கீழே விழுந்தது. பாலாஜி மறுமுறை ஓடித் தாக்குவதற்கு அவன் மரக் கால் பெருந் தடையாயிருந்தது. உடனே ஜயஸிங், திடீரென்று புலிபோற் பாய்ந்து, பாலாஜிக்குக் கைவிலங்கிட்டான்.

ஜயஸிங் வெகு சுருக்கமாகப் பின்வருமாறு கூறினான்:—

முதலாவதாக, ஜெயராமின் கையில் காணப்பட்ட கருப்புப் புகை அடையாளம், துப்பாக்கி சுடப்பட்ட புகையாலுண்டானதல்ல. துப்பாக்கியிலிருந்து வெளிப்பட்ட புகையாயின், அது கையின் சிலபாகங்களிலேயே பட்டிருக்கும். ஆனால் அவன் கையிலிருந்த அடையாளம் அவ்வாறின்றி, கைமுழுவதுமிருந்தது. அது, அவன் வைரத்தை புதைக்க எரிந்த காகிதக்குப்பைகளால், தோண்டுகையில் ஏற்பட்டது.



இரண்டாவதாக, ஜமீன்தார் கிருஷ்ணசாமி நாயுடுவின் துப்பாக்கி இதுவரை உபயோகிக்கப்பட்டதல்ல. அதில் ஒரு குண்டு குறைந்ததற்குக் காரணம், அவரிடம் இருந்த குண்டுகளே அவ்வளவாக இருக்கலாம். அதை அவர் அதில் நிரப்பிவைத்திருக்கலாம். அத் துப்பாக்கியை சரியாக சோதித்ததில், அது சுத்தம் செய்யப்பட்டு குண்டுகள் நிரப்பப்பட்டதிலிருந்து உபயோகிக்கப்படவில்லை என்பது நிச்சயமாய்த் தெரிகிறது. இது எப்படியிருந்தாலும் 44-எண்ணுள்ள குண்டை, 38-எண்ணுள்ள துப்பாக்கியின் மூலம் எப்பொழுதும் சுடமுடியாது. ஜமீன்தாருடைய துப்பாக்கியின் எண் 38. பாலாஜியின் துப்பாக்கி44.

இதிலிருந்து ஒரு விஷயம் ஏற்படுகிறது. நான் யூகித்தபடி, ஜெயராம்—வெங்கடாங்கத்தின் சம்பாஷணையை யாராவது நிச்சயமாய் மறைந்திருந்து கேட்டிருக்கவேண்டும். அதை அவ்வாறு இந்த பாலாஜியே, தற்செயலாக சாமான் அறைக்கு சாமான் எடுக்கப்போனவன், ஒட்டுக் கேட்டான் (முன்னர், முதலதிகாரத்தில், ஓர் உருவம் இவற்றைக் கேட்டிருந்து, பின் வேலையை கவனிக்கச் சென்றது என வந்துளது இந்த பாலாஜியே). பின்னர், அவன் அந்த வைரத்தை தானே கவர்ந்துவிட எண்ணினான். ஆனால் இரவு இத்தனை மணிக்கு சந்திக்கவேண்டும் என்று ஜெயராமும் வெங்கடாங்கமும் பேசிக்கொண்டது இவன் காதில் சரியாக விழவில்லை. அதனாலேயே இவன் குறிப்பிட்ட மணிக்குச் செல்ல இயலவில்லை. பின்னர், நேரம் சென்று சென்றான். அப்பொழுது கிருஷ்ணசாமி நாயுடு வெங்கடரங்கத்தின் கழுத்தைப்பிடித்து நெருக்கும் சமயமாயிருந்தது. இவன் வெங்கடாங்கம் தன்னைப் பார்த்துவிட்டதை அறிந்ததும், அவனைப்பார்[illegible] தவறி ஜமீன்தாரைக் கொன்[illegible]ஜி விரைவாக அங்கிரு[illegible] வெளிப்பட்டான் ([illegible] புதர்களில் மறைந்[illegible]ருக்கையில், ஓர் உருவம் வெளிப்ப[illegible] விரைவாக மறைந்[illegible] என்றதும் பாலாஜியே). பி[illegible]ர்

ஒருவர் கண்ணிலும் படாமல் தன்னிடத்தை யடைந்தான். ஆனாலும் விதிவசம் அவனை விடவில்லை.

பாலாஜி தன் குற்றத்தை ஒப்புக்கொண்டபடியால் அவனுக்கு ஆயுள்பரியந்தம் தீவாந்தர தண்டனை கிடைத்தது. ஜெயராம் தான் செய்த காரியத்திற்காக வருந்தியபடியால், அவனுக்கு இரண்டு வருஷ கடுங்காவல் தண்டனை கிடைத்தது.

போலீஸ் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் ரிப்பாய்துரை, சர்க்காருக்கு ஜயஸிங்கின் துப்பறியும் திறமையை விவரித்து எழுதி, அவ் வைரத்தையே பதித்து ஓர் பதக்கமாக சன்மானித்துவிடலாம் என்றும் சிபார்சுசெய்து எழுதினார். அவ்வாறே சர்க்காரும் அதை ஆமோதித்தனர். போலீஸ் புலி ரிப்பாய்துரை, ஸ்ரீநிவாஸன், ஜயஸிங் முதலியோர் வெகு இன்பமாகத் தங்கள் நாட்களைக் கழித்துக் கொண்டிருக்கின்றனர்

சுபம்! சுபம்!! சுபம்!!!

சென்னை -600 0

# ORDER FORM.

Date................. Place..........................

To "BALA VIDYA" Office,
Publishers—SRI VIDYA PRESS,
No. 5, East Iyen Street, KUMBAKONAM.

Dear Sirs,

Please enlist me as a subscriber for the "BALA VIDYA" Monthly Journal for 1 year from 193 to 193 . The due subscription of Rs. 1—8—0 is sent through Money Order (* is to be recovered by V. P. P). which kindly acknowledge.

Yours faithfully,

Signature.

---

*Please strike off where necessary.
Complete address of the subscriber is to be given at the back. P. T. O

# "பால வித்யா" ஆபீஸ்.

பப்ளிஷர்ஸ்:- ஸ்ரீவித்யா பிரஸ்,
5. கீழய்யன் தெரு,
கும்பகோணம்,

...........................198

ஐயா !

தங்கள் ஆபீஸிலிருந்து பிரதி இங்கிலீஷ் மாதமும் பிரசுரமாகும் "பால வித்யா" என்னும் உயர்தர ஜர்னல் மாதப்பத்ரிகைக்கு என்னை ஒரு சந்தாதாரராக சேர்த்துக் கொண்டு பிரதி மாதமும் பத்திரிகையை அனுப்பிவரக் கேட்டுக்கொள்கிறேன்.

N.B. சந்தா தொகையை மணியார்டர் மூலமாக அனுப்பியிருக்கிறோம். (வி. பி. மூலம் அனுப்புங்கள்). இப்படிக்கு,

கையெழுத்து.

---

சந்தாதாரர்களின் முழுவிலாஸமும் பின் பக்கத்தில் விபரமாக எழுதி அனுப்பவும். P. T. O

The subscribers are requested to note that, by sending their subscriptions by M.O. in advance, they can save 2 or 3 As in the shape of postage that will accrue unnecessarily by the V.P. system.

**Subscriber's Full Address.**

**Name**..............................................................................

..............................................................................

..............................................................................

அறிவிப்பு.

வி. பி.மூலம் அனுப்பினால் தபால்செலவு ஜாஸ்தியாகும். ஆகையால் சந்தாதாரர்கள் சந்தா தொகையை மணியார்டர் மூல்யம் அனுப்பிவிடுவது நலம்.

சந்தாதாரரின் முழு விலாஸம்.

..............................................................................

..............................................................................

..............................................................................

உ

ஓம் பரப்பிரும்மணே நம:

# கங்காதரன்.

" ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் அம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு "
" திருவின் செல்வி மருவிடும் மார்பன்
மருமலர்ப் பாதம் வணங்கி வாழ்த்துதுமே."

## அத்தியாயம் 1.

"சீச்சீ! வாயை மூடு. உன் அயோக்கியத்தனம் முழுமையும் எனக்குத் தெரியாதென்று நினைத்துக்கொண்டிருக்கிறாயோ? வெட்கமில்லா மிருகமே! நான் வீட்டில் இல்லாத சமயம் பார்த்து நீ இங்கு வந்து பெண்பிள்ளைகளுடன் அரட்டை அடிப்பது எனக்கு நன்றாய்த் தெரியும். இன்னும் என் தாயாருமில்லாத சமயத்தில் நீ வந்து என் தங்கையுடன் பேசுகிறாயாம். அடே! நீ என் வீட்டிற்கு அடிக்கடி வருவதில் எனக்கு இஷ்டமில்லையென்று பலதரம் சொல்லியிருக்கிறேன். இனிமேல் எப்பொழுதாவது நான் உன்னை இவ்வீட்டிற்குள் பார்ப்பேனாகில் உன் காலை ஒடித்துவிடுவேன்."

"ஐயா! உமக்கு இஷ்டமில்லாவிட்டால் நான் உம்முடைய வீட்டிற்கு வருவது பிசகென்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் இதற்காக நீர் இவ்விதம் என்னைத் திட்டுவது அழகல்ல—"

"சீச்சீ! காலாடிப்பயலே! வாயை மூடிக்கொண்டு வெளியே போ."

இவ்விதம் வாக்குவாதம் செய்துகொண்டிருந்த இருவர்களில் ஒருவனுக்கு 24 வயதிருக்கலாம். அவனுடைய கண்

களில் கோபாக்னி ஜ்வலித்துக்கொண்டிருந்தது. மற்றொருவனுக்கு கிட்டத்தட்ட 21 வயதிருக்கும். அவனுடைய முகத்தில் வியக்கத்தக்க சாந்தமும் தீர்க்க கம்பீரமும் நன்கு புலப்பட்டன. அவன், "சரி; நாம் மேலும் இங்கு தாமதித்தால் வீண் வம்பாய் முடியும்." என்று தன்னுள் சிந்தித்தவனாய், திரும்பி பக்கத்திலிருந்த ஒரு அறையின் மறைவில் நின்றுகொண்டிருந்த சுமார் 15 வயதுள்ள ஒரு மங்கையை ஒருதரம் பிரியத்துடன் நோக்கிவிட்டு, மடமடவென்று வெளியே போய்விட்டான். அவன் சென்றதும் நாம் சொன்ன 24 வயதுள்ளவன் அப்பெண்மணி நின்றுகொண்டிருந்த அறைக்குள் நுழைந்து, அவளை ரௌத்திராகாரத்துடன் நோக்கியவாறு கொஞ்சநேரம் நின்றுவிட்டு, பிறகு திரும்பி, மற்றொரு மூலையில் நின்றுகொண்டிருந்த சுமார் 50 வயதுள்ள ஒரு அமங்கலி மாதை நோக்கி,

"அம்மா! நீ இப்படி இந்தப் பயலுக்கு இவ்வளவு இடம் கொடுப்பது சரியல்ல. ஸரஸ்வதியை நீ இவனுக்குக் கொடுக்கவேண்டுமென்று ஆசைப்படுகிறாயென்பது எனக்கு நன்றாய்த் தெரியும். ஆனால் அது முடியாத காரியம். அவளை வக்கீல் கிருஷ்ணய்யருக்குத்தான் கொடுப்பதென்று நான் நிச்சயித்துவிட்டேன். அவருக்கு இவ்விதம் இந்தப் பயல் இங்கு வந்து வட்டமிடுகிறானென்பது தெரிந்துவிட்டால் வம்பாய் முடியும். சரி; நாழியாய்விட்டது. ரயிலுக்குக் கிளம்பு." என்று கூறவே, அம்மாது, தாழ்ந்த குரலில்,

"அப்பா! வக்கீல் கிருஷ்ணய்யருக்கு வயது 50க்கு மேல் இருக்குமே. அவருக்குக் கொடுப்பதைக்காட்டிலும் குழந்தையை கிணற்றில்—" என்று மேலே பேசுமுன், குருஸ்வாமி எனப் பெயர்கொண்ட அவளுடைய புதல்வன், கோபத்துடன்,

"சரி சரி; வாயை மூடு. அடியே! இப்பொழுதே சொல்லிவிட்டேன். இக்காரியத்தில் என் இஷ்டத்திற்கு விரோதமாக நீ செய்ய உத்தேசித்திருந்தால், இதே நிமி-



ஷம் உன் குழந்தையை அழைத்துக்கொண்டு வெளியே போய்விடு. அதிருக்கட்டும். நீ ரயிலுக்குப் போகப் போகிறாயா இல்லையா?" என்று கேட்க, அம்மாது, விசனத்துடன்,

"போகாமல் என்ன பண்ணுகிறது? போய் வண்டி கொண்டுவா." என்றாள். குருஸ்வாமி, சிறிதும் மரியாதையின்றி,

"வண்டி வேண்டுமோ? இதோ இருக்கும் ரயில்வே ஸ்டேஷனுக்கு நடந்து போக முடியாதோ?" என்று கேட்க, அம்மாது,

"அதற்காக நான் சொல்லவில்லை. மழை வரும்போலிருக்கிறதே என்று சொன்னேன். சரி; ரயிலுக்கு நாழியாய்விட்டதா?" என்று வினவினாள்.

"அதான் ஆய்விட்டது என்று சொன்னேனே. உடனே புறப்படு." என்று குருஸ்வாமி துரிதப்படுத்தவே, அவனுடைய தாயார், விசித்து விசித்து அழுதவண்ணம் நின்றுகொண்டிருந்த தன் பெண்ணை நோக்கி,

"அம்மா! ஜாக்கிரதையாயிரு. நாளை காலைவண்டியில் வந்துவிடுகிறேன்." என்று கூறிவிட்டு அவ்வறையைவிட்டு வெளியே சென்றாள். உடனே குருஸ்வாமி, அப்பெண்மணியை நோக்கி,

"ஏண்டி! நான் திரும்பி வரும்வரையில் நீ ஆத்தில் தனியாயிருப்பாயா? ஆமாம்; மறந்தே போய்விட்டேனே. உன்னைத் தனிமையில் நான் விட்டுவிட்டுப் போனால், அந்தப் பயல் உன்னுடன் ஸரஸ ஸல்லாபம் செய்ய வந்துவிடுவானே. ஏண்டி! வெட்கங்கெட்ட நாயே! அவனுடன் பேச உனக்கு கூச்சமாயில்லையா? இருக்கட்டும்." என்று திரும்பி, தன் தாயாரை நோக்கி, "அம்மா! நாகு எங்கே?" என்று வினவ, அந்தம்மாள்,

"கொல்லையில் பத்துத் தேய்த்துக்கொண்டிருக்கிறாள்." என்று விடையளித்தாள்.

உடனே குருஸ்வாமி, கொல்லைப்பக்கம் சென்று, அங்கு பத்துத் தேய்த்துக்கொண்டிருந்த தன்வீட்டு வேலைக்காரி நாகுவை நோக்கி,

"அடியே! நான் அம்மாளை ரயிலில் ஏற்றிவிட்டு வருகிறேன். நான் திரும்பி வரும்வரையில் நீ உன் வீட்டிற்குப் போகவேண்டாம்." என்று கூறினான். நாகு சம்மதிக்கவே, குருஸ்வாமி முன்கட்டிற்குச் சென்று, தன் தாயாரை அழைத்துக்கொண்டு, வெளியே போய்விட்டான்.

அவர்கள் சென்றதும், ஸரஸ்வதி, "சரி; என்னை அந்தப் பழிகாரனுக்குத்தான் கொடுப்பதென்று என் தமயன் தீர்மானித்துவிட்டான். இனி நான் உயிருடன் இருப்பது பிசகு." என்று தீர்மானித்தவளாய் அவ்வறையைவிட்டு வெளியே சென்று, கூடத்திலிருந்த ஒரு அலமாரியைத் திறந்து, அதிலிருந்து ஒரு கடிதத்துண்டையும் பென்ஸிலையும் எடுத்து ஒரு கடிதம் எழுதிமுடித்தாள். பிறகு அதை மடித்து எடுத்துக்கொண்டு கொல்லைப்பக்கம் சென்று அங்கிருந்த வேலைக்காரியை நோக்கி,

"நாகு! உன்வேலை ஆய்விட்டதோ?" என்று வினவினாள். நாகு ஆய்விட்டதென்று விடையளிக்கவே, ஸரஸ்வதி அக்கடிதத்தை அவளிடம் கொடுத்து,

"இதை உடனே சென்று அவரிடம் கொடுத்துவிட்டு வா." என்று கூறியதும், நாகு துரிதமாய் வெளியே சென்றாள். அவள் அக்கடிதத்தை யாரிடம் கொடுக்கவேண்டுமென்று கேட்காததிலிருந்து அவளுக்கு அது யாரென்பது தெரியுமென்று தோன்றியது. வெளியே சென்றவள், கால் மணி நேரத்திற்குள் திரும்பிவந்து,

"அவர் வீட்டிலில்லை. கடிதத்தை என் தங்கச்சியிடம் கொடுத்து, அவர் வந்ததும் கொடுக்கும்படி சொல்லிவிட்டேன்." என்று கூறிக்கொண்டிருக்கையில், சுமார் 60 வயதுள்ள ஒரு பிராமணக் கிழவி, அவ்வீட்டிற்குள் ஓடிவந்து, மிகவும் பரிதாபகரமான குரலில்,



"ஸரஸ்வதி! உன் தமயன் எங்கே? இருந்தால் ஓடிப்போய் டாக்டர் கோபாலய்யரை அழைத்துக்கொண்டு வரச்சொல்லு. பார்வதிக்கு உடம்பு அதிகமாய்விட்டது. கால் ஜில்லிட்டுப் போய்விட்டது." என்று கூறவே, ஸரஸ்வதி, திகைப்புற்று,

"அடாடா! அண்ணா ஆத்தில் இல்லையே." என்று விடையளித்தாள். உடனே அக்கிழவி,

"ஐயோ! நான் என்ன செய்வேன்? சரி; வேறு யாரையாவது அனுப்புகிறேன்." என்று சொல்லிக்கொண்டே வெளியே ஓடினாள். அவள் சென்றதும், ஸரஸ்வதி, நாகுவை நோக்கி,

"அடியே! அடுத்த வீட்டிலிருக்கும் என் தோழி சாகக்கிடக்கிறாளாம். நீ கொஞ்சநேரம் வீட்டைப் பார்த்துக்கொள். நான் போய்ப் பார்த்துவிட்டு சீக்கிரம் வந்துவிடுகிறேன். நான் வர நாழியாய்விட்டால் ஒரு விளக்கைக் கொளுத்தி கூடத்தில் வை." என்று கூறிவிட்டு, வெளியே ஓடினாள். அச்சமயம் மாலை சுமார் 6 மணி இருக்கும்.

இங்கு, ஸரஸ்வதியின் குடும்பத்தைப்பற்றிக் கொஞ்சம் விபரமாய்ச் சொல்லவேண்டியது அவசியம். அவளுடைய தந்தையாகிய மகாதேவய்யர் நாம் சொல்லும் சமயம் இறந்து மூன்று வருஷகாலமிருக்கும். அவர் இறந்ததுமுதற்கொண்டே, குருஸ்வாமியின் தாயார், தன் பெண்ணுக்கு சீக்கிரம் விவாஹம் செய்துவிடவேண்டுமென்று நினைத்து, தன் பிள்ளையிடம் பலதரம் சொல்லியும், குருஸ்வாமி அவ்விஷயத்தில் சிறிதும் சிரத்தை எடுத்துக்கொள்ளாமலிருந்துவிட்டான். ஆனால் அவன், தன் தங்கையின் விவாஹத்தின் பொருட்டு, மிகவும் சிரமப்படவேண்டிய அவசியமே இல்லாமலிருந்தது. ஏனெனில் சகல நற்குணங்களும், வியக்கத்தக்க ரூபலாவண்யமும் வாய்ந்த நம் ஸரஸ்வதியை விவாஹம் செய்துகொள்ள, பல பணக்கார வாலிபர்கள் தயாராயிருந்தனர். அப்படியிருந்தும், குருஸ்வாமி தன் தங்கையை அவர்களில் ஒருவனுக்கும் விவாஹம் செய்து

கொடுக்க இஷ்டப்படவில்லை. அப்படி அவன் இருந்ததற்குக் காரணம் அவனுடைய நீச சுபாவமும், தன் தங்கையின் விவாஹத்தின் பலனாய் தான் நல்ல லாபமடையவேண்டுமென்று அவன் மனதிலிருந்த ஒரு கெட்ட எண்ணமுமே. "ஹே தெய்வமே! எனக்கு ஒரு பெண் கிடைக்கமாட்டாளா?" என்று ஏங்கிக்கொண்டிருக்கும் ஒரு வெட்கமற்ற கிழவனுக்கு, அவளை தான் கொடுக்கும்பக்ஷத்தில் அக்கிழவனிடமிருந்து தான் பெருந்தொகை பணம் பறித்துக்கொள்ளலாமென்று அவன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். கடைசியில் அவன் நினைத்ததுபோலவே, அதே ஊரிலிருந்த கிருஷ்ணய்யர் என்ற ஒரு வக்கீல், தன் 55வது வயதில் மறுவிவாஹம் செய்துகொள்ளப் பிரியப்பட்டு, ஸரஸ்வதியின் அழகைக் கண்டு மயங்கி, தன் எண்ணத்தை குருஸ்வாமியிடம் வெளியிடவே, குருஸ்வாமி, அவர் எல்லாச் செலவையும் ஒப்புக்கொள்ளுவதுமன்றி, தனக்கு ரூ. 2500 கொடுப்பதாயிருந்தால், தன் தங்கையைக் கொடுக்க முடியுமென்று கூறவே, கேவலம் மிருகமென்றே சொல்லத்தக்க அச்சண்டாளன் (கிருஷ்ணய்யர்) அதற்கு சம்மதித்தான். ஆனால் அதில் குருஸ்வாமியின் தாயாருக்குச் சிறிதும் இஷ்டமில்லை. நிற்க, இப்பொழுது ஸரஸ்வதியின் மனோநிலைமையைக் கவனிப்போம். அவளுக்கு ஏற்கனவே வயது 15 இருக்குமென்று சொல்லிவிட்டோம். ஆகவே, அவளுக்கும் வக்கீல் கிருஷ்ணய்யரை விவாஹம் செய்துகொள்ளுவதில் கிஞ்சித்தும் இஷ்டமில்லை என்பதை நாம் சொல்லவேண்டியது அனாவசியம். இதுவுமன்றி, அப்பெண்பாவை, ஏற்கனவே ஒரு வாலிபன்மீது காதல்கொண்டு, அவனைத் தவிர வேறு ஒருவரையும் தான் விவாஹம் செய்துகொள்ளுவதில்லை என்றும், அப்படியே தன் தமயன் தன்னை வேறு யாரையாவது விவாஹம் செய்துகொள்ளுமாறு பலவந்தம் செய்யும்பக்ஷத்தில் அவ்விவாஹத்திற்கு முன் தான் தற்கொலை செய்துகொண்டுவிடுவதென்றும் தீர்மானித்திருந்தாள். அவ்விதம் தன் பெண் அவ்வாலிபனை விவாஹம் செய்துகொள்ள ஆசைப்படுகிறாளென்ற விஷ-



யம் அவளுடைய தாயாருக்கும் தெரியும். அம்மாது, அவ்வாலிபனையே நேரில் கேட்டு, அவனும் தன் புதல்வியை மணந்துகொள்ள பிரியப்படுகிறானென்பதையும் தெரிந்துகொண்டிருந்தாளாகையால், எப்படியாவது அவளை அவ்வாலிபனுக்கே கொடுத்துவிடவேண்டுமென்று தீர்மானித்திருந்தாள்.

இப்பொழுது ஸரஸ்வதி காதலித்த வாலிபன் யாரெனக் கவனிப்போம்.

**கங்காதரன்** எனப் பெயர்கொண்ட அவ்வாலிபனுக்கு தற்சமயம் சுமார் 21 வயதிருக்கும். அவனுடைய தந்தையாகிய கல்யாணராமய்யர் நம் கதை நடக்கும் இடமாகிய வஸந்தபுரியில் மிகவும் கியாதிபெற்ற ஒரு வக்கீலாயிருந்தார். நாம் சொல்லும் சமயம் அவர் இறந்து கிட்டத்தட்ட 5 வருஷகாலமிருக்கும். அவருக்கு, கங்காதரனைத் தவிர, கோபாலன் எனப் பெயர்கொண்ட மற்றொரு புதல்வனும் உண்டு. அவ்வாலிபனுக்கு தற்சமயம் 23 வயதிருக்கலாம். அவனுக்கு ஏற்கனவே விவாஹமாய்விட்டது. அவன் தன் 20வது வயதிலேயே படிப்பை நிறுத்திவிட்டு தன் தந்தை வைத்துச்சென்ற ஏராளமான ஐவேஜியைக் கொண்டு சுகஜீவனம் செய்துகொண்டிருந்தான். அவன், தன் தந்தை இறந்ததும், தங்களுக்குள்ள ஆஸ்தியையும் கவனித்துக்கொள்ள சாமார்த்தியமின்றி, ராமானுஜய்யங்கார் என்ற ஒரு வைஷ்ணவ பிராமணனை கார்யஸ்தராக நியமித்து, அவரையே எல்லாவற்றிற்கும் நம்பியிருந்தான். கோபாலனுடைய தம்பி கங்காதரனுக்கு, ராமானுஜய்யங்கார் மகா தந்திரசாலி யென்றும், பணப்பேய் பிடித்தவரென்றும் நன்றாய்த் தெரியும். ஆனாலும் கோபாலன் அவரைத் தன் குலதெய்வமென்றே நினைத்துவந்தானாகையால், அவனை உத்தேசித்து கங்காதரன் அந்த வைஷ்ணவ பிராமணனுடைய அட்டஹாஸத்தை சகித்துக்கொண்டிருந்தான். கங்காதரனுக்கு தன் தமயன்[illegible]ளவற்ற பிரியமும் மரியாதையும் உண்டு. [illegible]வே

பீ.ஏ. பரீக்ஷையில் தேறிவிட்டு, மேலும் வக்கீல் பரீக்ஷைக்கு வாசிக்கும் எண்ணத்துடன் இருந்தான். அவனுடைய பாகத்திற்குமட்டும் இரண்டு லக்ஷத்துக்குமேல் ஐவேஜி இருந்தும், அவ்வாலிபனிடம் சாதாரணமாய் பணக்காரர்களிடம் காணக்கூடிய மமதை, அகம்பாவம், படாடோபம் இத்தகைய துர்க்குணங்கள் சிறிதும் கிடையா.

நிற்க, கங்காதரன் தன் 12வது பிராயத்திலிருந்து 18வது வயதுவரையில் அச்சமயம் வஸந்தபுரியிலேயே ஒரு ஹைஸ்கூலில் உபாத்தியாயராயிருந்த நம். ஸரஸ்வதியின் தந்தை மகாதேவய்யருடைய வீட்டிற்கு தினந்தோறும் சென்று படிப்பு கற்றுக்கொள்ளுவது வழக்கம். ஆகவே, அவ்வாலிபன் சிறுவயதிலிருந்தே அடிக்கடி ஸரஸ்வதியைப் பார்க்கவும் அதன் பலனாய் அவளுடைய நற்குணங்களைத் தெரிந்துகொள்ளவும் ஸந்தர்ப்ப மேற்பட்டது. வரவர, அவர்களுள் ஒருவித அன்பு ஜனித்து, அது தற்சமயம் காதலாக மாறியிருந்தது. ஸரஸ்வதியின் தந்தை இறந்த பிறகும் கங்காதரன் அடிக்கடி அவளுடைய வீட்டிற்குப் போவதுண்டு. கடைசியில், ஒருமாதகாலத்திற்குமுன், ஸரஸ்வதியின் தாயார் தன் பெண்ணை விவாஹம் செய்துகொள்ள அவனுக்கு இஷ்டமுண்டாவென்று அவனை நேரில் கேட்கவே, அவன் இஷ்டமுண்டென்று ஒப்புக்கொண்டான். ஆனால் அவன் அவ்விதம் அடிக்கடி தன் வீட்டிற்கு வருவதிலும், தன் தங்கையை விவாஹம் செய்துகொள்ளுவதிலும், ஸரஸ்வதியின் தமயன் குருஸ்வாமிக்கு இஷ்டமில்லை யென்பதும், இன்னும் அவன் இஷ்டப்படாததற்குக் காரணமென்னவென்பதும், நம் நேயர்கள் அறிந்த விஷயம். இவ்வத்தியாயத்தின் ஆரம்பத்தில் நாம் கூறியதுபோல், குருஸ்வாமி தன் வாயில் வந்தபடியெல்லாம் திட்டி அவமானப் படுத்தியது நம் கங்காதரனையே.

கங்காதரனுடைய வீடு சந்நியாசித்தெருவிலும், குருஸ்வாமியின் [illegible]யர் தெருவிலும் இருந்தன.

[illegible]ம்,

188777

"பால வித்யா"

## 1931௵ ஜனவரி௴ பஞ்சாங்கம்.

| தே. | த.௴ | வார. | திதி, நக்ஷத்திரம், தியாஜ்ஜியம், யோகம் முதலியன. |
|---|---|---|---|
| 1 | ௧௭ | வியா | துவா ௪௦-௨௩, ※ ௩௩-௪௬, தி ௨-௫௨, கா-௨ப, ம. |
| 2 | ௧௮ | வெ | திர ௩௮-௪௮, ரோ ௩௩-௪௫, [தி௧௩-௨௮, ரா௧௯-௧௩, ம, சி. |
| 3 | ௧௯ | சனி | சது ௩௯-௫, மிரு ௩௨-௪௨, [ரா ௨௪-௪௪, சி, ம. |
| 4 | ௨௦ | ஞாயி | ○ ௩௨-௨௨, திரு ௩௦-௩௯, [ரா ௩௦-௫௮, ஆருத்ரா தர், சி. |
| 5 | ௨௧ | திங் | பிர ௨௭-௫௨, புன ௨௭-௪௯, [சே ௩-௧௩, ரா ௧௮-௧௮, அ, சி. |
| 6 | ௨௨ | செவ் | துவி ௨?-௪௭, பூச ௨௪-௨௫, [ரா ௨௬-௦ சி |
| 7 | ௨௩ | புத | திரு ௧௭-௧௯, ஆயி ௨௦-௩௫, ரா ௨௦-௪, திதிதுவயம், சி. |
| 8 | ௨௪ | வியா | சது ௧௧-௨௯, மக ௧௯-௩௦, ரா ௬-௪௫, அ, சி. |
| 9 | ௨௫ | வெ | பஞ் ௫-௩௯, ஷஷ்ட ௫௪-௧௯, பூர ௧௨-௨௪, ரா ௦-௪௦, சி. |
| 10 | ௨௬ | சனி | ஸப் ௫௮-௩௯, உத் ௮-௩௦, தி ௨௮-௧௪, கர்போ-நிவ ௪௦- |
| 11 | ௨௭ | ஞாயி | அஷ் ௪௯-௫௦, ஹஸ் ௪-௫௮, தி ௨௩-௫௫, அ, சி. [௨௩, ம |
| 12 | ௨௮ | திங் | நவ ௪௫-௫௦, சித் ௧-௫௫, சுவா ௫௭-௪௯, தி ௧௯-௨௪, சி, அ |
| 13 | ௨௯ | செவ் | தெ ௪௨-௪௧, விசா ௫௮-௨௦, தி ௧௩-௨௨, மகரரவி ௫௫- [௫௭, தசமிதிதி. போகிபண்டிகை, ம, சி. |
| 14 | ௧ | புத | ஏகா ௪௦-௩௮, அனு ௫௮-௯, தி ௮-௧௮, ஏகா-திதி சி |
| 15 | ௨ | வியா | துவா ௩௯-௪௯, கேட் ௫௯-?, தி ௧௨-௨௨, மாட்டுபொ, சி |
| 16 | ௩ | வெ | திர ௪௦-௭ மூல ௯௦, தி ௧௯-௪௮, ரா ௨௯-௩, பிரதோ, அ. |
| 17 | ௪ | சனி | சது ௪௧ ௫௧, மூல ௧ ௨௨, சே ௧ ௨௨, தி ௨௯-௪௪, சி. |
| 18 | தை ௫ | ஞாயி | ● ௪௪-௪௨, பூரா ௪-௫௪, தி ௨௯-௨௧, அமாவா, சி, அ. |
| 19 | ௬ | திங் | பிர ௪௮-௪௩, உத்ரா ௯-௨௮, தி ௨௦-௨௨, சிர-உப, ம அ. |
| 20 | ௭ | செவ் | துவி ௫௩-௨௯, திரு ௧௫-௧, தி ௨௯-௦, ◡, கும்பாய ௫௩- |
| 21 | ௮ | புத | திரு ௫௮-௪௧, அவி ௨௧-௭, ரா ௧௨-௨௪, ம, சி. [௫௧, சி. |
| 22 | ௯ | வியா | சது ௯௦-௦, சத ௨௭-௩௪, ரா ௧௯-௩௯, ம, சி. |
| 23 | ௧௦ | வெ | சது ௪-௪, பூரட் ௩௩-௫௨, தி ௦-௦, சி. |
| 24 | ௧௧ | சனி | பஞ் ௯-௦, உத்ரட் ௩௯-௪௧, தி ௦-௭, ஷஷ்டிஉப, சி, ம. |
| 25 | ௧௨ | ஞாயி | ஷஷ் ௧௩-௧௨, ரே ௪௪-௪௪, தி ௧௨-௮, அ, சி. |
| 26 | ௧௩ | திங் | ஸப் ௧௯-௨௯. அசு ௪௮-௪௫, ரா ௯-௧௨, ர்தஸப், அஷ் தி, |
| 27 | ௧௪ | செவ் | அஷ் ௧௮-௩௫, பர ௫௧-௩௩, தி ௧௩-௪௯, நவமி-தி, சி [சி, |
| 28 | ௧௫ | புத | நவ ௧௯-௨௨, ※ ௫௩-௬, தி ௨௨-௧௭, கார்-உப, தச-தி, அ சி |
| 29 | ௧௬ | வியா | தெ ௧௮-௫௩, ரோ ௫௩-௨௩, ரா ௪-௨௯, ஏகா-திதி, ம. |
| 30 | ௧௭ | வெ | ஏகா ௧௭-௧௦, மிரு ௫௨-௩௪, தி ௭-௧௧, பீ ஏகா, அ-தி, சி |
| 31 | ௧௮ | சனி | துவா ௧௪-௨௨, திரு ௫௦-௪௪, தி ௧௨-௫௪, பிரதோ, திர-தி [ம, சி. |

| | | | |
|---|---|---|---|
| ரா | | | குரு |
| | 13 தனுரவி | | செ |
| புத சனி | ரவி சுக் | | கே |

# பாலவித்யா சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய இடங்களுக்கு வருஷம் ஒன்றுக்கு தபாற்கூலியுள்பட ரூபா. 1—8—0

சிங்கப்பூர், பினங், தென்னாப்பிரிக்கா, ஜாவா முதலிய வெளி நாடுகளுக்கு முன்பணம் ரூபா 2—0—0

ஜீவிய சந்தா உள்நாட்டிற்கு ரூ 15. வெளி நாட்டிற்கு ரூ 20.

ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா இல்லை.

"பாலவித்யா" தனி சஞ்சிகை அணா மூன்று

## சந்தாதாரர்களுக்கு முக்கிய அறிவிப்பு.

(1) சந்தாதாரர்கள் எந்தமாதத்தில் சந்தாதாராய்ச் சேர்ந்தாலும் ஜனவரி மாதத்திலிருந்தே கணக்கு வைக்கப்பட்டு முன் மாதத்திய சஞ்சிகைகளையெல்லாம் அனுப்புவிக்கப்படும்.

(2) நமது பத்திரிகை பிரதி இங்கிலீஷ்மீ கடைசி தேதியில் வெளிவரும். பத்திரிகை வெளியான பத்து தினங்களுக்குள், அது உங்களுக்கு வந்து சேராவிட்டால், உடனே எங்களுக்கு எழுதினால் நாங்கள் கவனிப்போம். அதற்கு மேற்பட்டால் சஞ்சிகையின் கிரயத்திற்காக மூன்று அணா தபால்பில்லை வாங்கி அனுப்பினால்தான் மறுபடியும் ஸஞ்சிகை அனுப்பப்படும்

(3) சந்தாதாரர்கள் தமது சந்தாத் தொகையை முன்னதாக மணியார்டர் பண்ணிவிட்டால் இருபாலர்க்கும் ஸௌகர்யம். வி. பி. யில் அனுப்புவதாயிருந்தால் சந்தாதாரர்களுக்கு நான்கு அணா அதிகமாக செலவாகிறது. சிங்கப்பூர், பினங்கு முதலிய வெளிநாடுகளுக்கு வி. பி.யில் அனுப்பமுடியாது. அவர்கள் முன்பணம் மணியார்டர் செய்தாவது பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர்கள் வாங்கியனுப்பித்தாவது சந்தாதாரராகச் சேரவேண்டும்.

(4) சந்தாதாரர்கள் நமக்கு கடிதம் எழுதும்போது எப்பொழுதும் சந்தா நம்பரை எழுதவேண்டும். பதில் வேண்டுவோர் ரிப்ளை கார்டாவது தபால் பில்லையாவது வைத்து அனுப்பவேண்டும்.

(5) முக்கிய குறிப்பு:—நமது ஸஞ்சிகைக்கு சிறந்த கட்டுரைகளும் அரியவியாஸங்களும் மற்றும் உள்ள அரிய நீதி ஸாரங்களும் பிரசுரிப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்படும், அப்படி அனுப்பப்படுபவைகளை ஸஞ்சிகை பிரசுரிக்கும் தேதிக்கு போதுமான காலம் முந்தியே அனுப்பவேண்டும்.

### விளம்பர விகிதம்.

ஒரு மாதத்திற்கு, முழுப் பக்கம் ரூ 20. அரைப் பக்கம் ரூ 11.

மற்றபடி நீண்டகால விளம்பரத்திற்கு எங்கள் ஆபீஸுக்கு எழுதவும்.

பாலவித்யா ஆபீஸ்,

நெ. 5, கீழ அய்யன் தெரு, ஸ்ரீவித்யா பிரஸ், கும்பகோணம்

Printed and Published by N. Venkataraman,
at the Sri Vidya Press, Kumbakonam.